குளந்தியம்

V2 N10:42 2ф பே

SL

ணா211, N128KA

N29.2.42.

189077

39

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ௵ அக்டோபர் ௴ 24௳ [No. 42.

OFFICE ... 1929 ... MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 821
2. அப்பர். (நாடக வியல்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 823
3 மலர்வனம் (காதன் மாதவி) "மதுகரம்" 826
4. நம்மாழ்வார் விபவம் K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 828
5. வில்லிபாரத விளக்கம் (இராசசூயச் சருக்கம்) T. S. நடராஜபிள்ளை. B. A, B. L. 829
6. தமிழ்ப் பாடம் (திருவரங்கத்தந்தாதி) 831
7. கம்பராமாயணம் (உலாவியற் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. 833
8. மானதசாத்திரம் (Psychology) T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L. 836
9. மதிப்புரை 839
10. வர்த்தமானம் 839

## கலாநிலயம்

### கல்சரை அடையும் வகை

I

189077

இவ்வாண்டின் பிற்பகுதிமுதற்கொண்டு கல்சரென்னுங் கருத்தில் கலந்துள குணங்களை விளக்கிவர லாகின்றோம். கல்சரா மித்தத்துவம் பெரும்பாலும் பிரம்மதேவனை யொத்திருக்கின்றது. முழுமுதற் கடவுளின் சித்தம் நிறைவேறுமாறு அவனின்று தோன்றினுன் பிரமன்; கல்சரும் கடவுளை ஆதியாகவுடையது; அக்கடவுளினது கருத்து நடைபெறவேண்டுமென்ற நோக்கமே கல்சர்நிலையா மென்பது முன்னிங் குரைத்தவைகளால் தெரியலாகும். தன்னை யீன்றவம் முதல்வன் யாரெனத் தேடுவான் அமைந்த அப்பிரமனைப் போல் கல்சரினது நாட்டமும் கடவுளைத் தேடி யடைவதில் நிலைத்திருக்கின்றது. உயிர்களைப்படைக்கின்றுன் பிரம்மனெனின், அவ்வுயிர்களுக்கும் உயிர் படைத்துத் தருகின்றது கல்சர்; கல்சரிலாதார் உயிர் வாழ்வாரென்பது வம்பே யாகும். கலைமகள் கலந்த நாவால் மறைநெறியோதுவான் அவ்வேதன். கல்சரும், நல்வாழ்விற்குரிய விதிகளைக் கவிதையெனும் நாவே கொண்டு நவிலுகின்றது. பாலும்நீரும் பிரித்துண்ணும் அன்னத்தை ஊர்வான் அயன்; பகுத்தறிவுகைத்தே கல்சரும் படர்கின்றது. தாமரை மேவிய அப் பிரம்மனைப்போல் கல்சரும், மாந்தர் இதயமலரைத் தன திருக்கையா வுடையது.

கல்சருக்கும் நான்குமுகமுண்டு. தன்னுடைய தன்மையைக் காட்டு முகமொன்று; கவிதையின் நலங்களைக் கேட்குமுக மொன்று; அகத்திருக்கும் இயற்கைகளை ஆயுமுக மொன்று; செய்வகை யின்னதெனச் செப்புமுக மொன்று. இவைகளில், கல்சரின் அவசியம், கல்சரும் கவிதையும், சுய கல்சர் என்ற பகுதிகளால் முதன்மூன்றும் நமக்கு அறிமுகமாயின. இனி இக்கல்சரை எல்லோரும் எய்துதற்குச்செய்யற்பாலன யாவை என்பதைத் தேர்ந்துரைக்க, எஞ்சிய முகத்தையும் எதிர்நோக்கியவ ராவோம்.

நம்முடைய இயற்கையம்சங்களாகிய தருமசிந்தனை தெய்வசிந்தனை பகுத்தறிவு உறவினதுவகை அழகினில்மகிழ்வு என்பனவற்றை, நம்பால் அமைந்துள சுயவாராய்ச்சிச் சக்தியால் தேர்ந்து அவ்வவற்றின் தன்மை நிலை வேறுபாடு இயக்கம் முதலியவைகளையுணர்ந்து அவ்வவை தத்தம் இயற்கைமாறுமலும் முதல்வன்மை சிதையாமலும் நாளுக்குநாள்வளர்ந்து வரும்படி தம்வரையில் செய்துகொள்வதும், மற்றவர்களுக்குச் செய்துவைப்பதும் இவையிவை யெனத் துணிந்து அவ்வழியொழுகலே கல்சர்நெறியைக்கடைபிடித்ததாகும். இந்நெறி நடப்போர்க்கு வழித்துணையாயிருந்து, இடையுறு தளர்ச்சி அயர்வு முதலியவைகளை விலக்குவதற்குரிய உதவிகள் சில, கரந்திருந்ததிர்க்கும் பகைகளைக் கடத்தற்குதவும் கருவிகள் சில, வழிவிலகி யலையாமல் செல்லுறு கதியிற் செவ்வனம் உய்க்கும் குறிகள் சில, ஆங்காங்கு இளைப்பாறுதற் கிருக்கின்ற தண்ணறுஞ்சோலையும் தெண்ணீர் வாவியுஞ் சில, இவரை விருந்தாட்டியுவக்கும் இல்லறத்தோர் வாழ்கின்ற வளமனைகள் சில, இவையனைய பல கல்சருக்குக் கைதரும் சாதனங்களாம். அவைகளின் உண்மையையும் தன்மையையும் தெரிந்து கையாளுந் தாளாண்மையால் கல்சர்நிலை

கைகூடும். ஆதலின் இவைகள்தாம் இருந்தபரிசு இன்னதெனச் சிறிது நோக்குவோம். இவ்விடயங்களின் எல்லை போமளவு உரைப்பதெனின் இது பரந்த நூலாய்விடும்; அடிப்படையாய் அமைந்துள சிற்சில பாகங்களையே இங்குச் சுருக்கமாகக் கூறிட நினைத்துளோம்.

யாவற்றினும் முதலாக உரைக்க வேண்டியதொன்று இச்செவ்வியி லுளது. சாதனங்களெல்லாம் திரண்டிருப்பினும், அவைகளைப் பயிலும் முறைகளைத் தெருண்டவராயினும், கல்சரேகதியென்றவோர் முழு முதல் நம்பிக்கை யில்லையேல் யாதும்பயன் எவரும் பெற்றிடார். தாமும் தம்மினமும் அல்லலில் நன்னிலை எய்துதற்குக் கல்சரன்றிப் பிறிதொரு வழியிலை என்ற நினைவுமாத்திரமல்லாமல், இக்கல்சர் யாவரும் அடைய வல்லதொன்றென்னும் நம்பிக்கையும் நிலைத்திருத்தல் இன்றியமையாதது. இந்த உறுதி ஓர் அசைவின்றி அமைந்திருந்தாற்றான் சாதனங்களைப் பயில்வதால் பயன் கைகூடும். இதுபற்றியே, அரசியலியக்கங்கள், சட்டங்கள், பற்பலவிதங்களாய சீர்திருத்தமுயற்சிகள், தற்காலக் கல்விமுறைகள், கூட்டுறவுச்சங்கங்கள், கட்சிகள், கைத்தொழில் வர்த்தகங்களின் பெருக்கங்கள், அறவுரைகள், இவையனைய புறத்திருந்து நன்மைகளைப் புகுத்த முயல்கின்றகருமங்கள் ஒன்றும் உலகத்தை ஒருபடிகூட உயர்த்தமாட்டாமை வெட்ட வெளியாயிருப்பதை, நம்முடைய கருத்தாலும், அரவிந்தர் இரவீந்திரநாதர் கார்லைல் எமர்ஸன் மாத்யூ ஆர்னல்ட் போன்ற மெய்யறிவுடைய மேலோர்களது பொருளுரைகளைப் பெயர்த்தெழுதியும், எமது தலையங்கங்கள் பற்பலவற்றில் தெரிவுறச் செப்பியுள்ளோம். இவைகளெல்லாம் வெறும் சொற்றொடர் ஆரவாரங்களும், ஒருவரோடொருவர் இகன்றழுலும் சேற்றுநிலங்களும் ஆயினவேயன்றி உற்றவொரு ஆன்மாவின் வறுமை தீர்க்கும் உதவிகள் ஆகவில்லை. ஆவதற்குரிய அம்சங்களும் அவைகள் அல்ல. தான் பின்னிழியத் தன்நிலைமை முன்னடையவேண்டுமென முயல்தல் முறைபிறழ்ந்த முயற்சியென்பது மேலோக்கிற்குத் தென்படாதெனினும் விடயங்களை ஆய்ந்தறியும் பயிற்சி சிறிதேனுமுடையார், சொல்லிக்காட்டிய பின்னுதல் தெரிந்துகொள்வது அருமையன்று. இவ்விதம், வேறெவ்வழியாலும் வாய்ப்பதொன்றுமில்லை என எதிர்மறையாய் மறுத்ததோடமையாது, 'கல்சரின் அவசியம்' என்ற தலையங்கங்களில், மாந்தரினம் மாயவாழ்க்கைவிட்டுத் தம் ஆன்மாவையுமாய்விக்காது ஒளியும் இன்பமும் எங்கும் இயங்க விளங்கவேண்டுமெனின் கல்சரொன்றே அந்நிலைபேறுடைய பெருநலத்தைச் சாதிக்க வல்லதென்பதை உடன்பாடாகவும் உரைத்தனம். மற்றுப் பண்டைநாள் இத்தேயம் இன்பமும் மேன்மையும் உற்றிருந்ததற்கு எங்கெங்கும் யாவர்மாட்டும் கல்சரே பரவியிருந்ததென்பதை எமது கொள்கைக்கு ஆதாரமாகப் பற்பலவிடங்களில் கூறியபெற்றியும் நினைவில் இருக்கலாம். இக்கருத்துக்கள், கல்சரின் நன்மையை நினைத்திராதார்க்கு நம்பிக்கையும், நம்பியிருப்பவர்க்கு நிலையாய உறுதியும் நல்கும் நோக்கத்தின.

கல்சரைக் கைவிட்டால் வேறு கதியில்லை என்னும் உறுதியோடு அக்கல்சரை யாவரும் வேண்டுமெனின் எய்தவுங் கூடுமென்ற நிச்சயமும் இன்றியமையாதெனப் பின்னர்ச் செப்பினோம். 'சுயகல்சர்' என்ற வரிசையில்வந்த தலையங்கங்கள் இந்நிச்சயத்தை நிலைக்கவைக்கும் நோக்கத்தை உட்கொண்டுள. கல்சருக்குரிய அம்சங்கள் அனைத்தும், மனிதராய ஒவ்வொருவரிடத்திலும் இயற்கையிலேயே இருக்கின்றனவென்றால், அவைகளை வேளாண்மை செய்யுமாறு செய்தால் செழித்தோங்கி வளருமென்பது பெரிதும் ஐவுறவெய்துதற் கொத்ததொன்றன்று. இவ்வியற்கைகளாம் விதையுண்டு, மனமெனும் விளைநிலமும் உளது, பின் அது விளையாதவாறு சிதைகின்ற கொடுமை பெரிதேயன்றி, நிழலும் பழமுமாய் விளையலாவது அருமையோ அன்று. ஆதலால், மாநுடரனைவரும் உலகடங்கலும் கல்சருடையவராதல் இயலும் என்னும் நம்பிக்கை, சிறிதே சிந்திக்குந் திறமுடையோர்க்கும் வந்தே தீரும்.

இவ்விரண்டும் நிச்சயமானபின்னரே அவ்வியற்கை விதைகளைக் கல்சரென்னும் கற்பகத் தருக்களாக வளர்ப்பதற் கமைந்த சாதனங்களைப்பற்றி நினைப்பது முறைமையாதலால் அவைகளை இவ்வளவு வற்புறுத்த நேர்கின்றது. கடவுள் நமக்கு அளித்திருக்கின்ற இயற்கையம்சங்களை வளர்த்தலே நம் முதலும் முடிவுமான கருமமும் கடமையும் ஆகும் என்ற திண்ணிய கருத்தினோடு கல்சரின் கைகளை இறுகப்பற்றி இருப்போர்க்கு எதுவும் ஏற்ற சாதனமாகும். அஃதிலார்க்கு எட்டியசாதனங்கள் சிறந்தனவேனும் அதுகொண்டு அவர் சாதிக்கலாவது வெகுசிறிதே. செல்வத்தால், சொல்லித்தரும் உபாத்தியாயர்களால், புத்தக நிலயங்களால், அமைந்த சாதனங்கள் சூழப்பெற்றும் ஆயிரமாயிரவர் சாதித்த தொன்றுமின்றியே வெற்றுநாள் கழித்துக்கழித்து தாமும் கழிந்துவிடக் காண்கின்றோமே. இதற்கெதிர், புறத்துணைகள் யாவுமின்றியும் உயர்பெரும் நிலைகளை எய்துவார்சிலர். இப் பின்னவர்க்கு ஊக்கம் இருந்தது, முன்னவர்க்கு இல்லையென்பதே இதன் காரணம். ஊக்கமுளதேல் உற்ற சாதனங்களைத் தேடிக்கொள்வார்—கிடைக்காக்கால் படைக்கவும் படைத்துக்கொள்வர். மாபெரும் நோக்கமொன்றில் ஊன்றிய நோக்கமுடைமையே அரைப்பங்கு முடிவை அடைந்ததாகும்; அன்னார், இடையூறெல்லாம் எய்தாமற் கடந்துவிட்டாரென்றே கூறலாம். உயரிய நோக்கமும் அதனை எய்த இயலும் என்னும் நம்பிக்கையும் வாய்த்தவர்க்கு யாதும் அருமையில்லை. மேன்மேலும் நமதான்மா உயர்கதி அடையலாவதே இப்பிறவியின் பயனாகும் என்னுமவ் வுண்மை தொன்மொழியாய்மாத்திரம் நடமாடிக் கழிதலாகாது. வாய் விளம்புமொரு செய்தியாய் நிற்றலும் போதாது. நம் வாழ்க்கையின் மெய்ம்மை அதுவே என்றநிச்சயம் நிலைத்திருந்து மனமொழிமெய் முழுதும் வியாபித்து இயங்குதல் வேண்டும். மெய்ந்நெறி நன்மையில் நிச்சயமுடைய இந் நம்பிக்கை, சேய்மைக்கண் திகழ்தரும் செம்மையின் முழுமையைச் சிறிதுசிறிது காட்சிகொண்டு, மாண்புடைய நம் முயற்சியால் உயர்ந்து வருகின்றோம் என்ற பரிசு ஓரளவு தெரியவரவும், கருதிய கருமத்தில் உய்க்கின்ற ஊக்கம் நாளுக்குநாள் அதிகம் மிகுந்து மேன்மேல் நம்மை நிமிரச்செய்யும். இத்திறத்தினோர் தங்கள் கருமத்திற்குக் கடவுளும் கருணையால் கைதருவாரென்பதையும், ஆன்மா அழிவிலதாகையால், நினைத்தது முழுவதும் இப்பிறவியில்



முடியாவிடினும் இங்கு நாம் விட்ட அளவிலிருந்து பின்வரும் பிறவிகளில் தொடர்ந்துகொள்ளலாம் என்பதையும் நினைக்குங்கால், அச்சத்தால் தளர்வதும், விரைவால் பதறுவதும் இலராய், புவனம் ஒன்றுபடவரினும் அசையா மனத்தவராய்த் தம்மரும் நிலையில் இமயமேபோல் தண்மையே தலைக்கொண்டு உலகூட்டும் மாபெருங் கருணையாம் நதிகள் பெருகிப்பாய நிற்பவ ராவார்.

எனின், நம்முடைய முன்னேற்றத்தின்பொருட்டு நாம் உபயோகிக்கும் முறைகள் யாவற்றிற்கும் உயிராயிருக்கவேண்டியது சுயகல்சர் எய்தவேண்டுமென்ற நோக்கமே. இச் சுயகல்சர்நோக்கமும் மெய்யான நோக்கமா யிருத்தல்வேண்டும். இவ்வாறு கூறுவதால் குறிக்கும்பொருள் என்னையோ வெனின், சுயகல்சரே நமது நோக்கத்தின் முடிவாக இருக்கவேண்டுமேயன்றி இக்கல்சரை கருவியாகத்தான்கொண்டு வேறொன்று எய்துவதற் குளதென்னும் கருத்தின்மையாம். மக்களுட் பெரும்பகுதியோரைப் பாழ்படுத்தும் இப்பிழையை வன்பொடு விலக்காவிடின், கல்சர் கல்சர் என்று சொல்லித்திரிவதால் விளைவது விலக்கரிய தீமையேயன்றி வேறில்லை. கல்சர் என்ற வார்த்தையை ஓயாது சொல்லிக்கொண்டு கலாசாலைகளை நிறுவுவோர் நாடுவோர் நடத்துவோர்களில், அதனால் தொழிலும் பொருளும் செல்வாக்கும் அடைவதே கண்ணுங்கருத்துமாயிருப்பவர் ஒருவரிருவரலர்; நூற்றுக்கணக்கிலு மடங்காது அவர்தொகை. ஆயிரத்திலுமமையாது. மிகுதிபற்றி அனைவரும் அன்னவரே என்றாலும் ஏற்கும். இவர்களெல்லாம் உண்மையில் கல்சரடைய நினைப்பவ ராகார். தமக்குப்புறத்ததாய்த் தம்முடைய இயற்கைக்கு அயலதாய் இருக்கும் சில பொருள்களை தேடச்சென்றவர் என்பதில் ஐயமில்லை. இத்தகைய இழிய நோக்கம், கல்சரென்னும் பேரோடு வழங்கினாலும், இகலால் உழலும் படுகுழி பாய்ச்சுவதல்லால் விண்ணிடை உயர்த்தும் விமான மாவதெங்ஙனம்? புறத்துள அண்டங்களும் அகிலப்பொருள்களும் யாவும், தன் கையளவும் காணுத படியாக்கும் பெருமைக்குரிய ஓர் தத்தும் தன் அகத்தே உளது என்னும் நிச்சயமே முதலாகத் தொடங்குவதுதான் கல்சரை மெய்யான நோக்கத்தோடு நாடுதற்கடையாள மாகும். தான் தானேயாய் ஆவதற்குக் கல்சரைக் கடைபிடிப்பார் உத்தமர். தான், பிறிதின்கிழமையாய் ஒன்றைப் பெறும்பொருட்டு விவகரிப்பதெல்லாம் கூலிக்கு மாரடிக்கும் கொள்கையே யன்றிக் கல்சர் ஆகாது.

# அப்பர்

## 7. அப்பரும் நாடக வியலும்

[809வது பக்கத் தொடர்ச்சி]

### III. நாடகக் கதை

திருக்கைலாயத் திருநேரிசைப் பதிகத்தின் முதற் செய்யுள்:—

கனகமா வயிரமுந்து மாமணிக் கயிலைகண்டு
முனகனு யரக்கனோடி யெடுத்தலு முமையாளஞ்ச
அனகனுப் நின்றவீச னூன்றலு மலறிவீழ்ந்தான்
மனகனு யூன்றினேனேன் மறித்துநோக் கில்லையன்றே?

என்பது இப்பதிகத்தின் புனைந்துரையாகும். 2-ம் செய்யுள்முதல் 9-ம் செய்யுள் வரையிலுள்ள பன்முகத் துறைகளையும் இப் பாயிரம் தன்னுள் அடக்குகின்றது. அச் செய்யுட்களின் அணிகளையும் படிப்படி ஏறும் ஓசையையும் கவனிக்க:—

கதித்தவன் கண்சிவந்து கயிலைநன் மலையையோடி
யதிர்த்தவ னெடுத்திடலு மரிவைதா னஞ்சவீச
னெதிர்த்தவ னூன்றியிட்ட நிலையழிந் தலறி வீழ்ந் [தான்
மதித்திறையூன்றினேன்மறித்துநோக்கில்லையன்றே.

கறுத்தவன் கண்சிவந்து கயிலைநன் மலையைக்கையால்
மறித்தலு மங்கையஞ்ச வானவ ரிறைவனக்கு
நெறித்தொரு விரலாலூன்ற நெடுவரைபோல வீழ்ந் [தான்
மறித்திறை யூன்றினேன் மறித்துநோக் கில்லை [யன்றே?

கடுத்தவன் கண்சிவந்து கயிலைநன் மலையையோடி
யெடுத்தலு மங்கையஞ்ச விறையவ னிறையேநக்கு
நொடிப்பள விரலாலூன்ற நோவது மலறியிட்டான்
மடித்திறை யூன்றினேன் மறித்துநோக் கில்லை [யன்றே?

கன்றித்தன் கண்சிவந்து கயிலைநன் மலையையோடி
வென்றித்தன் கைத்தலத்தா லெடுத்தலும் வெருவ [மங்கை
நன்றுத்தா னக்குநாத னூன்றலு நகழவீழ்ந்தான்
மன்றித்தா னூன்றினேனேன் மறித்துநோக் கில்லை [யன்றே?

களித்தவன் கண்சிவந்து கயிலைநன் மலையையோடி
நெளித்தவ னெடுத்திடலு நேரிழை யஞ்சநோக்கி
வெளித்தவ னூன்றியிட்ட வெற்பினு லலறிவீழ்ந் [தான்
மளித்திறை யூன்றினேன் மறித்துநோக் கில்லை [யன்றே?

கருத்தனுய்க் கண்சிவந்து கயிலைநன் மலையைக் [கையால்
ஒருத்தனு யெடுத்தவாறே யேந்திழை யஞ்சவீசன்
திருத்தனுய் நின்றதேவன் றிருவிர லூன்றவீழ்ந் [தான்
வருத்துவா னூன்றினேனேன் மறித்துநோக் கில்லை [யன்றே

கடியவன் கண்சிவந்து கயிலைநன் மலையையோடி
வடிவுடை மங்கையஞ்ச வெடுத்தலு மருவநோக்கிச்
செடிபடத் திருவிரலா லூன்றலுஞ் சிதைந்து வீழ்ந் [தான்
வடிவுற வூன்றினேனேன் மறித்துநோக் கில்லை [யன்றே?

கரியத்தான் கண்சிவந்து கயிலைநன் மலையைப்பற்றி
யிரியத்தா னெடுத்திடலு மேந்திழை யஞ்சவீச

னேரியத்தா னூன்றுமுன்ன நிற்கிலா தலறிவீழ்ந் [தான்
மரியத்தா னூன்றினேனேன் மறித்துநோக் கில்லை [யன்றே?

இவ்வெட்டுச் செய்யுட்களினும் மனதில் ஊன்றுமாறு கூறப்பட்டவை:—(1) இராவணான்கயிலையைப் பேர்த்தெடுக்கச்சென்ற முறை:—கதித்தவன் கண்சிவந்து கறுத்து, கடுத்து, கன்றிக்களித்து, கருத்தனுய், கடியவன், கரியத்தான் கண்சிவந்து செல்லல் நகைப்புக்கு இடமாகும். ஏனெனில் அவன்விதி ஒருகணத்தில் விளங்காநிற்பதால். (2) அவ்வண்ணம் இராவணான் செயினும், அவனை இறைவன் மதித்து ஊன்றவில்லை. வருத்துவான் ஊன்றினேனேல், மறித்து நோக்கில்லையன்றே? "நன்றுத்தான் நக்கு நாதன்", "நெரியத்தா னூன்று முன்னம் நிற்கிலாது (அரக்கன்) அலறிவீழ்ந்தான்," இத்திருவிளையாடலைக்காண்பீராக வென்பது (3) உமையவள், பெண்பாலாதலால், அப்பாலுக்குரிய அச்சத்தை வெளிப்படுத்துகின்றனர்.

இத்திருப்பதிகம், சிவபெருமான், பார்வதி, இராவணன் மூவருடைய குணுதிசியங்களை வெளியிடுகின்றது. தன்னிகரில்லா இத்தலைவன் கருணாநிதி, சாந்தமூர்த்தி, மலையைப்பார்த்து நாய்குலைப்பதுபோல் இராவணன் கடித்துக் கயிலையைப் பேர்த்தும், சற்றும் கோபிக்காது, திருவிரல் சிறிதூன்றி வாளாவிருந்தனன். சிதைந்தவன் தன்னைப்பாட அவனுக்கு வேண்டிய வரங்களும் தந்தான், "இத்தகைய மூர்த்தி எங்கேனு முண்டோ ?" என்பதுபோல் எம்பெருமான் திருவருட்கடலை வியந்து இப்பதிகம் பாடுகின்றது.

பார்வதிதேவியார் இயற்கையில் அண்டசராசரங்களின் ஆதிபராசக்தியாயினும் சிற்றுருவாய்ப் பெண் வடிவில் உருவகப்பட்டஞான்றே பெண்தன்மைக்குரிய நால்வகைக்குணங்களில் ஒன்றுகிய அச்சத்தை இச்சந்தர்ப்பத்தில் வெளியாக்குதல் நாடக இலக்கண அந்தத்தைக் காட்டுவதற்கேயாம். இம்மங்கை,பரிவை, நேரிழை, வெருவ, அஞ்ச, திருத்தனுய் நின்ற தேவன், திருவிரலூன்ற நேர்ந்தது என, அழகிய சொற்றொடர்களால் அப்பர் இச்சம்பவத்தை விளக்குகின்றார்.

இராவணன் அரக்கனுயினும்உலகவழக்கில் காணப்படும் கல்வியற்றோர் தன்மையான தானென்னும் அகங்காரம் பெற்றதின் பயன் செவ்வனே பெறுகின்றான். செருக்கு,அதனுனுண்டாகும் கோபம்,இவையே செய்யுங் காரியத்தை ஆய்ந்தோய்ந்து பார்க்கும் தன்மையை யிழக்கச்செய்யும். இதனுல் இவன் கயிலையெடுத்தலும், இவன் பருத்ததோள்களும் முடிகளும் இருத்தப்பட்டன. இதனுல் கல்வியில் இவன் நவ வியாக்கிரண பண்டிதனுயினும் கல்வியால் அறியொணுத அனுபவம் பெற்றனன். அங்ஙனம் இவன் அநுபவத்தால் கற்றதையே திருக்கடைக்காப்புச் செய்யுளிற் காணலாம்.

* கற்றனன் கயிலைதன்னைக்
காண்டலு மரக்கனேடிச்
செற்றவ னெடுத்தவாறே
சேயிழை யஞ்சவீச
னுற்றிறை யூன்றுமுன்ன
முணர்வழி வகையால்வீழ்ந்தான்
மற்றிறை யூன்றினேனேன்
மறித்துநோக் கில்லையன்றே ? (10)

இவ்வாறு நாடகக்கதையைக் கூத்தன் பாடியாடும் போது, நவீன நாடகமேடையிற்கண்டு நாம் களிப்பதிற் பதின்மடங்கு செலவின்றி வருவோர்களிப்பர். அவருக்கு நாற்பொருளும் சித்தியாகும். ஏனெனில் முக்கியமாய் முன்னின்றுடும் கூத்தனுக்குத் துணையாய் வருபவர் ஆடல்ஆசான், நன்னூற்புலவன், தண்ணுமை யருந்தொழில் முதல்வன், குழலோன், யாழ் வல்லோன் முதலானோர். ஆதலால் அரங்கிற் பாடியாடும் ஆட்டம், இயற்றமிழ் வாயலில் யாதொரு குற்றமும் நேராது. இசைக்கருவிகளிற் சிறந்த குழல், யாழ் என்பவற்றின் துணைபெற்றுத் தண்ணுமையால் சீர்பெற்று நடிக்கப்படும் இவற்றின் அமைதி, இளங்கோவடிகள் அரங்கேற்றுகாதையிற் பகரக் காண்க.

ஆடலாசிரிய னமைதி

" இருவகைக் கூத்தி னிலக்கண மறிந்து
பல்வகைக் கூத்தும் விலக்கினிற் * புணர்த்துப்
பதினே ராடலும் பாட்டுங் கொட்டும்
விதிமாண் கொள்கையின் † விளங்க வறிந்தாங்
காடலும் பாடலும் ‡ பாணியுந் தூக்குங்
கூடிய நெறியின கொளுத்துங் காலைப்
பிண்டியும்பிணையலுமெழிற்கையுந் தொழிற்கையுங்
கொண்டவகை யறிந்து கூத்துவரு காலைக்
கூடை செய்தகை வாரத்துக் களைதலும்
வாரஞ் செய்தகை கூடையிற் களைதலும்
பிண்டி செய்தகை யாடலிற் களைதலும்
ஆடல் செய்தகை பிண்டியிற் களைதலும்
குரவையும் வரியும் விரவல செலுத்தி
யாடற் கமைந்த ஆசான்" — 12—25
(அரங்கேற்றுகாதை - சிலப்பதிகாரம்)

[இத்தகை ஆசானே யாடாது பிடனை ஆட்டுவித்தல் நாடகமரபு]

இசையாசிரியனமைதி

யாழும் குழலுஞ் சீரு மிடறுந்
தாழ்குரற் றண்ணுமை யாடலொ டிவற்றி

---

* இதையே மற்றும்
எடுத்தன னெழிற் கயிலையிலங்கையர் மன்னன் றன்னை
யடுத்தொரு விரலாலூன்ற வலறிப்போ யவனும்வீழ்ந்து
விடுத்தனன் கைநரம்பால் வேதகீ தங்கள்பாட
கொடுத்தனர் கொற்றவாணுள் குறுக்கைவீ ரட்டனுரே.
—திருக்குறுக்கை - திருநேரிசை 10,

* ஆனை யாறென வாடுகின் றன்முடி
வானை யாறு வளாயது காண்மினே
நானை யாறுபுக் கேற்கவ னின்னருள்
தேனை யாறு திறந்தாலே யொக்குமே.
திருவையாறு - திருக்குறுந்தொகை 9.

† எடுத்த வாளரக் கன்றிறல் வண்ணமும்
இடர்க்கண் போற்பெரி தாகிய வண்ணமும்
கடுத்த கைந்நரம் பாலிசை வண்ணமு
மடுத்த வண்ணமு மாவரை யாறரே.
திருவையாறு - திருக்குறுந்தொகை 10.

‡ பொலம் புண்டரீகப் புதுமலர் போல்வன போற்றி [யென்பார்
புலம்பும்பொழுதும்புணர் துணையாவனபொன்னனையாள்
சிலம்புஞ் செறிபாடகமுஞ் செழுங்கிண் கிணித்திரளு
மலம்புந் திருவடி காண்கவையாறனடித்தலமே"
திருவையாறு - திருவிருத்தம் 2.



OFFICE OF THE REG... MADRA

னிசைந்த பாட லிசையுடன் * படுத்து
வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கித்
தேசிகத் திருவி னோசைகடைப் பிடித்துத்
தேசிகத் திருவி னோசை யெல்லா
மாசின் றுணர்ந்த வறிவின னுகிக்
கவியது குறிப்பு மாடற் றொகுதியும் †
பகுதிப் பாடலுங் கொளுத்துங் காலை
வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கு
மசையா மரபி னிசையோன் "— (ஷை 27-36)

கவிஞனமைதி

இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறியத்
தமிழ்முழு தறிந்த தன்மைய னுகி
வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்தி
னாட்டிய நன்னூ னன்கு கடைப்பிடித்
திசையோன் வக்கிரித் திட்டதை யுணர்ந்தாங்
கசைய மரபி னதுபட வைத்து
மாற்றோர் செய்த வசைமொழி யறிந்து
நாத்தொலை வில்லா நன்னூற் புலவன்" 37-44.

தண்ணுமை யாசிரியனமைதி

ஆடல் பாட லிசையே தமிழே
பண்ணே பாணி தூக்கே முடமே
தேசிக மென்றிவை யாசி னுணர்ந்து
கூடை நிலத்தைக் குறைவின்று மிகுத்தாங்கு
வார நிலத்தை வாங்குபு வாங்கி
வாங்கிய வாரத் தியாழுங் குழலு
மேங்கிய மிடறு மிசைவன கேட்பக்
கூருகிர்க் கரணங் குறியறிந்து சேர்த்தி
யாக்கலு மடக்கலு மீத்திறம் படாமைச்
சித்திரக் கரணம் சிதைவின்று செலுத்து
மத்தகு தண்ணுமை யருந்தொழின் முதல்வன்
—ஷை (45-55)

குழலோனமைதி

சொல்லிய வியல்பினிற் சித்திர வஞ்சனை
புல்லிய வறிந்து புணர்ப்போன் * பண்பின்
வர்த்தனை நான்கு மயலறப் பெய்தாங்
கேற்றிய குரலிளி யென்றிரு நரம்பி
னொப்பக் கேட்கு முணர்வின னுகிப்
பண்ணமை முழவின் கண்ணெறி யறிந்து
தண்ணுமை முதல்வன் றன்னொடும் பொருந்தி
வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்
கிசையோன் பாடிய விசையி னியற்கை
வந்தது வளர்த்து வருவ தொற்றி
யின்புற வியக்கி யிசைபட வைத்து
வார நிலத்தைக் கேடின்று வளர்த்தாங்
கீர நிலத்தி னெழுத்தெழுத் தாக
வழுவின் றிசைக்கும் குழலோன் (ஷை 56-70)

யாழாசிரியனமைதி

"ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியின்
ஓரேழ் பாலை நிறுத்தல்..........
பெறுமுறை வந்த பெற்றியி னீங்காது
படுமலை செவ்வழி பகரும் பாலையெனக்
குரல்குர லாகத் தற்கிழமை திரிந்தபின்
முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங்
கிளிமுத லாகிய வெதிர்படு கிழமையுங்
கோடி விளரி மேற்செம் பாலையென
நீடிக் கிடந்த கேள்விக் கிடக்கையி
னிணைநரம் புடையன வணைவுறக் கொண்டாங்
கியாழ்மேற் பாலை யிடமுறை மெலிய
வலிவு மெலிவுஞ் சமனு மெல்லாம்
பொலியக் கோத்த புலமையோன் "—ஷை (7094)

எனவே நவீன நாடக மேடைகளில் பாடப்படும் (Harmonium) ஆர்மோனியம் முதலான சங்கீதமோ என்னும் சந்தேகம்உண்டாக்கும் இசைக்கருவிகள் அக்காலவரங்குகளில் வரா. இக்காலத்தில் இசைக்கருவிகள் கூத்தர் வெளியாவதற்கு முன்பும், அவ்வவ் வங்கங்களுக்குஇடையிலும் பொழுதுபோக்குக்காகப் பாடப்படுகின்றனவே யொழிய, நாடகக் கதைக்கும், அல்லது அதனுள்ளடங்கிய செய்யுட்களுக்கும், இவ்விசைக்கும் யாதொரு சம்பந்தமும் பெரும்பாலும் காணப்படாது. முற்காலத்திலோ கூத்தன் யாதொரு பிழையுமின்றி நடிக்கவே இத்துணைப் புலவர் அவனுக்குத் துணைவருவர். பரமன் ஆடும் கூத்திலும் இத்தகைய துணைவர் உளர்போலும்:—

கொக்க ரைகுழல் வீணை கொடுகொட்டி
பக்க மேபகு வாயன பூதங்கள்
ஒக்க வாட லுகந்துடன் கூத்தராய்
அக்கி னோடர வார்ப்பா ரூரரே
திருவாரூர் - திருக்குறுந்தொகை -1.

கோணிக் கொண்டையர் வேடமுன் கொண்டவர்
பாணி நட்டங்க ளாடும் பரமனுர்
ஆணிப் பொன்னினண் ணுமலை கைதொழப்
பேணி நின்ற பெருவினை போகுமே.
திருவண்ணுமலை - திருக்குறுந்தொகை 7.

பூத்தன பொற்சடை பொன்போல்
மிளிரப் புரிகணங்க
ளார்த்தன கொட்டி யரித்தன
பல்குறட் பூதகணத்
தேத்தென வென்றிசை வண்டுகள்
பாடுசிற் றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல் லாருள
ரோவென்றன் கோல்வளைக்கே
கோயில் - திருவிருத்தம் 6.

---

* துரவ னூர்கொடு கோட்டியுங் கொக்கரை
விரவி னூர்பண் கெழுமிய வீணையும்
மருவு நாண்மலர் மல்லிகை செண்பகம்
பரவுநீர்ப் பொன்னிப் பாலைத்து றையரே
திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை 7.

† (i) அரவ மார்த்தன லாடிய வண்ணலைப்
பரவு வாரவர் பாவம்ப றைதற்குக்
குரவை கோத்தவ னுங்குளிர் போதின்மேல்
கரவி னுன்முக னுங்கரி யல்லரே
சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 26.

(ii) பூத்தா டிக்கழி யாதேநீர் பூமியீர்
தீத்தா டித்திறஞ் சிந்தையுள் வைம்மினோ
வேர்த்தா டுங்காளி தன்விசை தீர்கென்று
கூத்தா டியுறை யுங்குட மூக்கிலே
திருக்குடமூக்கு - திருக்குறுந்தெகை, 2.

* குழலொடு கொக்கரைகைத் தாள மொந்தை
குறட்பூத முன்பாடத் தானு டும்மே
கழலொடு திருவிரலாற் கானஞ் செய்து
கனலிகள்கட் டிருவுருவந் தான்காட் டும்மே
எழிலாரும் தோள்வீசி நடமா டும்மே
யீமப் புறங்காட்டி லேமந் தோறும்
அழலொடு மேயட்ட மூர்த்தி யாமே
யவனுகி லதிகைவீ ரட்ட னுமே
திருவதிகை வீரட்டானம்-அடையாளத்திருத்தாண்டகம்-7.

# மலர்வனம்

## காதன் மாதவி

776ம் பக்கத் தொடர்ச்சி

**கற்பின்** நீர்மையைக் காவிரியிற் புகழ்ந்த கோவலன், களவியல் நுணுக்கத்தை நகரொடுசார்த்தி மகிழ்கின்ற மூன்று கொச்சகச்செய்யுள்களும், தோழி தலைமகற் குரைக்கு மாற்றமா யமைந்துள. தம்முடைய மடமை எளிமை முதலிய கூறுமாற்றால் தலைவன்பாற் பரிவூட்டி யவனை வரைவிற் கழைக்கும் குறிப்புடைத் துறையன இவை. பாடுவான் கோவலன்,

மோது முதுதிரையான் மொத்துண்டு
போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணன்மேல் வண்ட
லுழுதழிப்ப மாழ்கி யைய
கோதை பரிந்தசைய மெல்விரலாற்
கொண்டோச்சுங் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண்
போகாப் புகாரே யெம்மூர்.

[மோதுகின்ற முதிய அலைகளால் எற்றுண்டதால் கரையில் வந்து அசைந்தனவாகிய ஒலிக்கின்ற வாயையுடைய சங்குகள், மாதர்கள் வரிகளையுடைய மணலின்மேல் இழைத்த சிற்றில் முதலிய விளையாட்டுகளின்மீது உழுதுசென்று அழிக்கவும், அவர் மனம்வருந்தி, கூந்தல் அவிழ்ந்து அலையும்படி தம் மாலையினின்று குவளை மலர்களை எடுத்து அச்சங்குகள்மீது தம் மெல்லிய விரலால் எறிந்து ஒட்டியதால் சிந்திக்கிடந்த அக் குவளைமலர்களைத் தமக்குச் சாடைகாட்டியழைக்கும் கடைக்கண்கள் என்று அவ்வழிச்சென்றோர் எண்ணித் தம்முடைய கண்கள் அவைகளைவிட்டு நீங்காமல் அவ்விடமே நின்றுவிடுகின்ற செய்தியுடைய புகாரே எமது ஊர்.]

காதல ராகிக் கழிக்கானற்
கையுறை கொண்டெம்பின் வந்தார்
ஏதிலர் தாமாகி யாமிரப்ப
நிற்பதையாங் கறிகோ மைய
மாதரார் கண்ணு மதிநிழனீ
ரிணைகொண்டு மலர்ந்த நீலப்
போது மறியாது வண்டூச
லாடும் புகாரே யெம்மூர்.

[இந்தக் கழியையுடைய கடற்கரைச் சோலையிலே, காதலராகக் கையுறை கொண்டுவந்து நாங்கள் ஏற்கும் சமயம் நோக்கிப் பின்னேதிரிந்த ஒருவர், அதனை நாங்கள் ஏற்று அவரைக் கூடியபிறகு, அவர் எம்மை நினையாது அயலார்போல் அகன்றுவிடுவதும், நாங்கள் சென்று எம்மை வரைந்துகொள் என்று அவரை இரப்பதும் நாங்கள் எவ்வாறு அறிவோம்! மாதர்களது கண்களையும், வாவியின்கண் சந்திரனது பிரதிபிம்பத்தில் இரண்டாக மலர்ந்துள்ள குவளைமலர்களையும் வேறுபாடு உணராமல் வண்டுகள் ஒன்றைவிட்டு ஒன்றிற்கு மாறிமாறி அலையும் செய்தியுடைய புகாரே எமது ஊர்]

கரிய மலர்நெடுங்கட் காரிகைமுன்
கடற்றெய்வங் காட்டிக் காட்டி
அரியசூள் பொய்த்தா ரறனிலரென்
றேழையம்யாங் கறிகோ மைய
விரிகதிர் வெண்மதியு மீன்கணமு
மாமென்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையு முத்துங்கண் டாம்பல்
பொதியவிழ்க்கும் புகாரே யெம்மூர்.

[நீலமலர்போன்ற பெரியகண்களையுடைய ஒரு பெண்ணின்முன் கடல்தெய்வமாகிய வருணனைச் சான்றாகக் காட்டிக்காட்டி 'உன்னைப்பிரியேன்' என்று உரைத்த அரிய சபதம் தவறினர், அதைக் காக்கவேண்டுமென்ற தர்மமில்லாதவர் என்று ஏழைகளாய நாங்கள் எவ்வாறு அறிவோம்! விரிந்தகதிர்களையுடைய வெண்மையான சந்திரனும் நக்ஷத்திரக்கூட்டமும் என்றே, விளங்குகின்ற வெண்மையானபுரிகளையுடைய சங்கையும் முத்துக்களையும் எண்ணி, ஆம்பல் மலர்கள் மலரும் செய்திவாய்ந்த புகாரே எமதுஊர் ஆகும்.]

வரைவுகடாய தோழியின் மொழிகளா யமைந்த இவ்வரிப்பாடல்கள் மாதவிக்கோர் மறுக்கமுண்டாக்கிய கொள்கை வியக்கற் பாலதே. உள்ளுறை யுவமங்களில் கரவுப்பொருள்களுங் கண்டாளவள். இக்கோவலன், தான் அயலோர் மாதினை ஆதரித்த தியற்கையேயென அமைதி யியம்பினனென் றுன்னினள். "போது சிறங்கணிப்பப் போவார்கண் போகாப் புகாரே" இவ்வூர், என்ற பான்மையால் "கண்ணிற்குவமையாய குவளையும் கோள்நெறி கற்றுளதென்னின் நுளைச்சியர் கண்வலைகடத்தலெளிதாமோ! மற்று, உற்ற மையலால், குவளையினும் கட்கடைக்குறிகள் நயந்துகாணும் குணமுடைய இவ்வூர் மைந்தர்களுள் யானும் ஒருவனன்றோ. என்னை நின்பால் போகவிடாமல் கண்கொண்டுதன்வயம் கவர்ந்தனள் இடையொருகாரிகை; யானும் அதற்கிணங்கி யவளயல் தயங்கலானேன். இவை இரண்டும் இந்நகர்க்கே இயற்கையெனின் என்பால் தனிப்பிழை ஏதுளது", என்றன்றோ சாதிப்பான் இத்தகவிலாக்கோவலன்" என்று பேதுறவெய்தினள்போலுமம் மாதாாள் மாதவி. பின்னிரு பாடலும் இவ்வையப் புகையை ஊதித்தந்தன. "காதலராயினோர் ஏதிலராவதும், அரியசூள்பொய்த் தறனிலராவது மறியா திவ்வூர். இவ்வூரன் யான், ஆதலின் என் கண்ணைக் கவர்ந்துகொண்ட அவளைப் பிரிய இயலாதானுயினேன். அவளூட்டிய காமத்தால் கையுறை கொண்டு காதலனுகி அவள்பின் இரந்தேன்; பின் ஏதில னுகமாட்டேன் ; சூளுரைத்தேன்; பின் துறந்தகல மாட்டேன் ; எனின், மாதவி என்னிலை இருந்தவா றுணர்ந்துகொள். மற்று, 'எனதன்பு மெய்யன்றே, மேலன்றே; இன்னொருத்தியின் ஆசைக்கு அவாவியதேன்' என வினவுவாயாயின், அன்னதற்கும் விடை இவ்வூரின் இயற்கைச்செய்தியிலேயே அமைந்திருக்கின்றது காண். எதுமெய் எதுபோலி யென்றியா னெங்ஙனம் உய்த்துணர்வேன்? மாதரார் கண்ணென்றும் மதிநிழலில் அலர்ந்த இணைக்குவளையென்றும் ஓராது ஊசலாடுமிவ்வூர் வண்டினங்கள். சங்கைச் சந்திரனென்றும் தரளத்தைத் தாரகையென்றும் மயங்கி ஆம்பலும் மாலைவருமுன் மலர்ந்து விடுகின்றது. நானுமே, கண்ணே குவளையே நீயோ அவளோ வென்றுணராது ஊசலாடாநிற்கின்றேன். புரிவளையும் வெண்முத்தும், பாங்கியர்புடைசூழ வரும் நீயோ அவளோ, மதியமும் மீனும் யாரோ, என்றோர்தலு மெனக் கருமையே," என்றுரைக்குங் கருத்தொன்றுமிலனுயினும், கோவலன் கூறிய தீதேயெனக் கொண்டனள் மாதவி.

கொண்டவள், பின் தன்முறையில், அவன் உள்ளத்தை உளைவிக்கும் கள்ளச்சூழ்ச்சியளாய், இதற்கோர் எதிர்வரி இயம்பினள். இவைகளும் ஊரியற்கையை உரைக்குமாற்றால் வரைதல்பற்றித் தோழி தலைமகற்கு வற்புறுத்திய மொழிகளா யமைந்துள. பாடினளப் பாழ்படு மூழ்வினைப் பயத்தின் வாய்விழு பேதை மாதவியாவாள்.

தீங்கதிர் வாண்முகத்தாள் செவ்வாய்
மணிமுறுவ லொவ்வா வேனும்
வாங்குநீர் முத்தென்று வைகலு
மான்மகன்போல் வருதி ரைய
வீங்கோதந் தந்து விளங்கொளிய
வெண்முத்தம் விரைசூழ் கானற்
பூங்கோதை கொண்டு விலைஞர்போன்
மீளும் புகாரே யெம்மூர்.

[இனிமையான கிரணங்களையுடைய சந்திரன்போன்ற முகத்தையுடைய எம் தலைவியினது சிவந்த வாயிலுள்ள அழகிய பற்களுக்கு நிகராகாதிருந்தும், 'இந்த முத்தை நீங்கள் வாங்கிக்கொள்ளுங்க'ளென்று விற்கின்ற வேடத்தோடு களவொழுக்கமுடையவராய் இங்கு நீர் நாள்தோறும் பித்தனைப்போல் வருகின்றீர்—பெருத்த அலையானது, விளங்குகின்ற ஒளியுடைய வெண்மையான முத்தைக் கொண்டுவந்து கொடுத்து அதற்குப்பதிலாக நன்மணம் கமழும் இக்கடற்கரையில் கிடக்கும் பூமாலைகளைக்கொண்டு வர்த்தகர்களைப்போல் போகும் செய்திவாய்ந்த புகாரே எம்மூராகும்]

மறையின் மணந்தாரை வன்பரதர்
பாக்கத்து மடவார் செங்கை
யிறைவளைக ளோற்றுவதை யேழைய
மெங்ஙனம்யாங் கறிகோ மைய
நிறைமதியு மீனு மெனவன்ன
நீள்புன்னை யரும்பிப் பூத்த
பொறைமலிபூங் கொம்பேற வண்டாம்ப
லூதும் புகாரே யெம்மூர்.

[இரகசியமாகக் களவிற்புணர்ந்த மாதினை, இந்த வலிய நெய்தல்நில வூரிலுள்ள மற்ற மாதர், "இவளை ஒருவன் வந்து புணர்ந்தான், பின் கைவிட்டேகினன்" என்று தம் வளைகள் குலுங்கச் செங்கைதட்டிப் பரிகசிப்பாரென்பதை நாங்கள் எவ்வாறு அறிவோம். அரும்பிப்பூத்த பாரமுடைய ஒரு நீண்ட புன்னைமரக் கிளையில் அன்னப்பறவை ஒன்று ஏறி உட்கார, உடனே வண்டுகள், அவ்வன்னத்தை வானத்தில் உதித்த சந்திரனென்றும், புன்னைமலர்களை விண்மீண்களென்றும் எண்ணி மாலைவந் துற்றதென மயங்கி, ஆம்பல் மலர்ந்திருக்கும் என்ற நினைவோடு அதன் முகையிடம்போய் ஊதுகின்ற செய்திவாய்ந்த புகாரே எமது ஊராகும்]

உண்டாரை வென்னறா வூணொளியாப்
பாக்கத்து ளுறையொன் றின்றித்
தண்டாநோய் மாதர் தலைத்தருதி
யென்பதியாங் கறிகோ மைய
வண்டா திரையழிப்பக் கையான்
மணன்முகந்து மதிமே னீண்ட
புண்டோய்வே னீர்மல்க மாதர்
கடறார்க்கும் புகாரே மெம்மூர்.

[மற்ற உணவுகளெல்லாம், உண்பவரால் வேட்டையில் வெல்லப்பட்ட விலங்குகளின் ஊன்களாக இருக்க, தன்னை உண்டவர்களை வென்று தனதுஆட்சியில் அடக்கிக்கொள்ளும் கள்ளினைத் தம் பேதைமையால் உண்பதுமன்றி, அவ்வாறு உண்டு தோல்வியுற்ற தன்மையைப் பிறர்க்குத் தோற்றும்படி வெளிவரலாகாது என்பதையு மோராமல், தமது எளிமையை ஒளியாமல்திரியும் வலைஞர்வசிக்கும் எமது இக் கடற்கரைஊரில், மருந்தொன்றும் இல்லாது தணியாத காமநோயை மாதர்பால் நீ தருவாய் என்பதை நாங்கள் எங்கு அறிவோம். மாதர்தம் விளையாட்டை அலைகள் வந்து அழித்துவிட, அவர் கைகளில் மணலை அள்ளி, மதியினிடத்தில் உள்ள ஊன்படிந்த வேல்போன்ற கண்கள் நீர்சொரியக் கடலைப்போய்த் தூர்க்கப்புகும் செய்திவாய்ந்த புகாரே எம் ஊராகும்]

போவார்கண்போகாவண்ணம் சிறங்கணிக்கும்குவளைகளால் கவர்ந்துகொள்ளப்பெற்றது தனதுள்ளமெனக் குறித்தனனக் கோவலன் என்று அவன் பாட்டிலோர் படுபொருள் கண்ட மாதவி, "குவளைகள் கட்கடை கழிப்பதும், அதனிற்கே தமதுள்ளந்துறந்து ஆடவர் நிற்பதும் இந்நகர்க்கியற்கையாதலின் நீயும் என்னையல்லால் அயலொருத்தியை நயக்க நேர்ந்தனையென இயம்பினுய் கோவல, என்செய்தி கேள். நித்திலம் விற்பார்போல நேர்வரோ மாதரென்ற புத்தியால் எம்பால் செல்வர் பற்பலர் போவா ரன்றோ! இப்புகாரில், திரிகின்ற அலையானது முத்தைக் கொணர்ந்துதந்து பூங்கோதை கொண்டேகவில்லையா! அன்னதோர் நகரின் இயலிற்கிணங்க யானும் அச்செல்வர்களுள் ஒருவனது கையுறையை ஏற்று என் நன்மாலையை அவனுக்குச் சூட்டினேன் கண்டாய். 'நினக்குச் செல்வமில்லையோ மாதவி, அவன் கொடுக்கும் முத்திற்கு நீ அவாவியது ஏன்?" என வினவுவாயாயின், என் விடை இது. என் முறுவல் ஒவ்வாது அத்தரளம், உண்மையே. ஆயினும் அவனை ஏற்க வேண்டுமென்ற கருத்தெனக் கெழுந்ததெனின் அதனைத் தகைவார் யார்! அன்றியும், வைகலும் வந்து வந்து அவன் வேண்டுங்கால் யான் மறுத்தலே கருமமாதல் இப்புகார்க்கு முறையன்று, இயற்கையுமன்று; வீங்கோதம்போல் பூங்கோதை கொண்டே ஏகினன் அவன்—என் தீங்கதிர் வாண்முகத் தழகில் மயங்கித் திரியும் பித்தன் நீ யொருவனே யல்லன்" என்று தேனொடு நஞ்சுகலந் தூட்டும் கள்வர்போல் இன்னிசைப் பாசுரத்துள் பெய்துதூவிய முட்கள் எய்தவாறே இலக்குத்தவருது கோவல னுவியுள் உறவுறத்தைத்தன. வேறோர் வங்கணனை நச்சியிவள் வஞ்சித்ததுமன்றித் தன்னையும் ஓர் பித்தனென்று இளிவரநக்கனள் என்ன மானமும் பிதிர்ந்து நைபவன்நிலை போழ்ந்த புண்வழி அழலும் நுழைந்தபடி யாயிற்று.

கோவலனது முதற்பாட்டிற்கு எதிர்மொழி இவ்வண்ணம் வகுத்தபின் மாதவி, அன்னவன் பாடிய மாறுபாசுரத்தில் தான் கண்டதாக நினைத்த கருத்தின் வழியே, "காதலராய் வந்தவர் எதிலராவது அறியா திவ்வூர்" என்றும், கண்ணும் குவளையுமறியாது வண்டுக ளுழல்வதுமிப் புகாரிற் கியற்கையென்றும் செப்பி உன் செயலிற்கு உறுதி காட்டினுய் கோவல, மற்றென் செய்தியுஞ் செப்புவல். நின்னுரைப்படியே, மறையின் மணந்தாரை ஊர்தூற்றத் துறந்தகலா நோன்பினதிப் புகார்; சூள்பொய்த் தகலுஞ் சூழ்ச்சியு மிங்கில்லை. ஆதலின், நீ விழைந்தவளை விடாது பற்றியிருப்பதுபோலவே, என்னை விழைந்த அவனும் விட்டேகுவானலன். மற்று, 'எனதன்பு மெய்யென்று எண்ணுமலோ மனதாலே வேறொருவனை வேண்டலாயினை

மாதவி', என்று கேட்பாயேல் கோவல, உன்னிலையே என்னிலையு மாயிற்றென்பதை மறக்கற்க. நின்னூரும் புகார், என்னூருமிப் புகாரே. எம்மூரில், கண்ணும் குவளையும் வேறுணரா வண்டும், புரிவெண் வளையும் தண்கதிர்மதியும் புன்னைப்பூவும் விண்ணின் மீனும் மயங்கக்காணும் ஆம்பலும், அமைந்ததுபோல், புன்னைப்பூங் கொம்பமர்ந்த அன்னத்தைத் தாரகை நாப்பண்நின்ற திங்களெனவும் வண்டுகள் மயங்கலாம். அவ்வாறு துணிந்து ஆம்பலை ஊதச்சென்ற வண்டு வறிதே உழலும். நானும் பொய்யான நின்னை மெய்யன்பன் எனச் சிலநாள் சிந்தித்திருந்தேனெனினும் இப்பொழுது தெளிந்துகொண்டேன்.'' என்று தான் கூறுவதாக அவனை எண்ணவைத்தாள்.

கோவலன் பாடிய சார்த்துவரிப்பாடல் மூன்றினிற்கும் மறுதிறம், மாதவியின் இரண்டுபாடல்களகவயி னடங்கிவிட்டது. மூன்றாவது பாடலையவள் தன்னுடைய நெஞ்சை ஆற்றிக்கொள்ளுமாறே புகன்றதா யிருத்தல்வேண்டும். "கோவலன்பால் யான் கொண்ட சினத்தைக் காட்டிக்கொள்வதால் எனக்குத் தீங்கு நேருமெனினும் யானொளியேன். உண்டாரை வெல்கின்ற நறவை உண்டிருக்கின்றரென்பதை ஒளியாப் பாக்கம் இது. மருந்தில்லா இந்நோயை இவன் எனக்குத் தந்துளான்—அப்படு பழியை நான் தீர்க்காது விடேன். மற்றதனை முற்றிலுந் தீர்ப்பதற்கு எளியளாகிய என்னால் எவ்வாறு இயலுமென்னிலோ, தம் வண்டலை யழித்த கடலை கைம்மணல்கொண்டு தூர்க்கபோகும் சிறுமியர்போலேனும் யான், தினையளவாதல் அவனை நோகச்செய்வேனேல் அதுவே போதும். வண்டல் அழிந்தது அழிந்ததே,கையால் மணல் முகந்துபோய்க் கடல்மீது வஞ்சினம் முடிப்பதென்பதில்லை. பேதை யான் இவனன்பின் கரையில் சிற்றில்கோலிய இன்பத்தை ஓர் அலையால் துடைத்துவிட்டான். கண்ணீர்மல்க யான் கையும் மணலுமாய் அப்பழி தீர்க்குமாறற்றேன்— என்னில் ஏழையர் யாரே உளர்'' என்று தன் உண்ணிலை நோக்கி உரைத்துக்கொண்டனள்போலும், அவ்விய மவியாச் சிந்தை மாதவி மடவாள் தானே.

## நம்மாழ்வார் விபவம்.

[ 804வது பக்கத் தொடர்ச்சி ]

இவர் விபவம் இன்னம்சற்று விவரிக்கத் தக்கது. ஞாயிற்றின் ஒளிபோல், இவர் புகழும் கீர்த்தியும் அருந்தவ மகிமையும் தத்துவஉணர்ச்சியும் உலகமெல்லாம் பரந்து விளங்கியதற்குக் காரணம் இவர் தெய்வப் புலமைபோன்ற கல்வித்திறமும்இவர் பாடிய வேத சாரமான ஒண்பொருளும் ஆகும். ஆயினும் முழுமுதற்காரணம் இவர் தபோமகிமையே யாகும். பின்னொருசமயம் இதை விசாரிப்போம்.

இவர் திருநாடு சேர்ந்தவுடன் இவர் திருத்தத் திருந்தி உபகாரமடைந்த ஸமூஹங்கள் இவருக்குத் திருக்கோவிலமைத்துத்திருவிக்கிரஹமும்ஆதிபிரான் சந்நிதியிலேயே பிரதிஷ்டை செய்துவைத்துப் பூஜை செய்து வந்தார்கள். சிலகாலம் இவர் திருவாய் மலர்ந்தருளிய நூல்களும் எங்கும் பரந்து பிரசாரமடைந்தன என்பதற்கு ஐயமில்லை. ஆனால் நாளடைவில் வாயனையும் பூஜனையும் செய்து பாராட்டுவாரின்றி இருள்வாய்ப்பட்டு இவர் பிரபந்தங்கள் மறைந்துவிட்டன. இது இயல்பே:—சுமார் நூறு வருஷத்திற்கு முன்னர்ச் சீவகசிந்தாமணி, மணிமேகலை சிலப்பதிகாரம் என்ற கிரந்தங்களின் பேர்கேட்டிருப்பாரன்றிப் படித்தவர்யாரெங்கேனு முண்டோ?. அப்படிப் படித்தவரைச் சிறுவிரல் வைத்து எண்ணலாம். கடவுள் அருளால், இவர் உதித்த ஊராகிய குருகூர் அவர்காலத்திலேயே ஆழ்வார்திருநகரி என்றுபெயர் மாறிவிட்டது. பின் ஸ்ரீமந்நாத முனி என்கிற யோகீசுவரர் திருக்குடந்தையில் சுமார் 1200 வருஷத்திற்கு முன் "ஆராவமுதே" என்று தொடங்குகிற தசகத்தின் முத்திரையால் தூண்டப்பட்டு ஆழ்வார் திருநகரிக்குச் சென்று இவ்வாழ்வார் பிரபந்தங்களையும் மற்றுமுள்ள வைணவ ஆழ்வார் பிரபந்தங்களையும் அந்தகாரமாகிற சிறையினின்றும் மீட்டார்.

பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம்
நலியும் நாகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை
கலியும்கெடும் கண்டுகொண்மின் கடல்வண்ணன் பூதங்
[கள் மண்மேல்
மலியப் புகுந்து இசைபாடி ஆடியுழிதரக் கண்டோம்.

பின்னர்ச் சைவ சமயாசிரியார்களில் சிறந்துவிளங்கிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் காலத்தில் பரகாலர் என்றும் திருமங்கைமன்னரென்றும் பெயர் வழங்கிய பின்னாழ்வாரில் ஒருவர் சீர்காழிக்கடுத்த ஸ்தலங்களில் திவ்வியதேச யாத்திரைசெய்யும்போது ஏவலாளர்கள் "பரகாலர்'' என்று (அதாவது பரமதங்களுக்குக் கூற்று) என்கிற பிருதுகூறச் சிவனடியார்கள் வழிமறித்துத் தடுக்க, ஆழ்வாருக்கும் திருஞானசம்பந்தருக்கும் சந்திப்புண்டாய் வாதம் எழ இவ்வைணவரின் பதிகம்பாடும் திறமையையும் அதின் நுண்மை பெருமைகளையும் உணர்ந்து ஞானசம்பந்தர் தாமே பிருதுகள்கூறச் சம்மதிதந்து போயினர். பின்னர்ப் பரகாலர் எங்குச் சென்றாலும் தமிழ்நாடெங்கும் வாகினி யுள்ளவரானார். இதின் உபயோகம் ஷிஆழ்வார், நம்மாழ்வார் விக்கிரஹத்தைத் திருநகரியினின்றும் தருவித்து ஸ்ரீரங்கத்தில் வருஷந்தோறும் உத்ஸவங்கண் டருளப்பண்ணச் செய்தார். இதுவும் சிறிதுகாலம் நடந்து இவ்வாழ்வார் காலம்சென்றபின் நின்றுவிட்டது. இது மாத்திரமன்று. பிரபந்தங்கள் ஏட்டில்மாத்திரமே மேல்கூறியபடி ஸ்ரீமந்நாத முனிகள் உத்தரித்துப் பிரசுரித்தவரையில் பாணங்களும் பூச்சிகளும் சுவைக்கக் கிடந்தன. மேல்செப்பியபடி நம்மாழ்வார் இயற்றிய நூல்கள் நாலுவேத சாரமென்று வைணவர்கள் போற்றும் நாலு பிரபந்தங்களாம். அவற்றுள் முதல் திருவிருத்தம் 100 பாட்டு, திருவாசிரியம் 7 பாட்டு, பெரிய திருவந்தாதி 87 பாட்டு, கடைசி ஸாமவேதசாரமான திருவாய்மொழி



1102 பாட்டு. இவைகளுக்கு ஸ்ரீமந்நாதமுனியின் பின் வந்தார் பலர் வெவ்வேறு அரும் வியாக்கியானங்கள் இயற்றி உள்ளார். இவ்வாழ்வாரின் தபசு நிலைமையை விசாரித்துப் பின்னர்ப் பிரபந்தஆராய்ச்சியிற் பிரவேசிப்போம்.

நம்மாழ்வாரின் தபோமஹிமை:—ஒருவரது தபசு அவரது உள்நிகழும் அகப்பொருள். அவர் சமகாலத் துள்ளவர்களுக்கு நடை சேஷ்டை வெளி இங்கிதம் இவைகளால் ஒருவாறு தெரியக்கூடுமானாலும் நம்மேபோல் பின்னுள்ளாருக்கு அவர் உரையால் மாத்திரம் ஏகதேசம் அறியத்தக்கது. வாய்ந்தவிடத்து அவரைப்பற்றி யுள்ள ஐதீகங்களும் அவரையறிய ஒருவாறு துணைக்கருவியாகும். இவ் வைதீகங்கள் இதரக் குறிப்புக்களால் திடப்படுமாயின் அவையே நற்சான்றாகி விடும். முதலில் இவ்வாழ்வார் விஷயமாயுள்ள ஐதீகங்களில் ஒன்று விசேஷித்துள்ளது. அதாவது, இவ்வாழ்வார் தாம் வீற்றிருக்கும் திருப்பதிதவிர்த்து மற்று அருகிலேயுள்ள திருக்கோவிலுக்குங்கூடத்தர்சனத்திற்குஎழுந்தருளவில்லை என்பது. இதற்கு அத்தாக்ஷியாகஅருகாமையிலுள்ள நவத் திருப்பதிகள் என்று பெயர்பெற்ற அடுத்த ஒன்பது திவ்விய ஸ்தலங்களில் உள்ள எம்பெருமான்கள் அவரவர் உற்சவம் கண்டருளும்போது இவ்வாழ்வாரின் ஸேவார்த்தமாக இவர் கோயில் கொண்டிருக்கு மிடத்துக்கே எழுந்தருளுகிறார்கள். இவ்வாழ்வாரை வருந் தெய்வங்களுக்கு முன் நிறுத்த மாலைமரியாதை அருளப்பாடு ஆனவுடன் அத்தெய்வங்களே ஆழ்வார் விடைபெற்றுத் தங்கள் க்ஷேத்திரங்களுக்கு மீள்கின்றார்கள். இவ்வாழ்வார் திருக்கோயில்கொண்டதுமுதல் இதுவே தொன்றுதொட்டு நடந்துவரும் மரபு.

# வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்.

(814 வது பக்கத் தொடர்ச்சி)

இராசசூயச் சருக்கம்.

பராசர முனிவன் மதலையாம் படியே
பகர்ந்தனை பழுதிலா மாற்ற
மிராசமண் டலத்தின் மரபினால் வலியா
லேற்றமுந் தோற்றமு முடையோன்
சுராசுரர் வியக்குங் கஞ்சனை மலைவான்
சூரன்மா மகன்வயிற் றுதித்தான்
றராதல மிசையே பிறந்திவன் கற்ற
தெத்தனை யிந்திர சாலம்.

[பராசர முனிவனது பிள்ளையே! நீ தகுந்தபடியே குற்றமற்ற வார்த்தையைச் சொன்னாய்; அரச கூட்டத்தில் குலத்தாலும், வலியாலும், உயர்வும் புகழும் பெற்றவனாய்த் தேவராலும் அசுரராலும், புகழப்பட்ட கம்சனைக் கொல்லும்பொருட்டு, சூரனுடைய மூத்தமகனான வசுதேவனது வயிற்றில் தோன்றிய இவன், பூமியில் பிறந்து தெரிந்துகொண்டன எவ்வளவு மாயைகளுண்டு]

இதுவும், பின்வருஞ் செய்யுட்களும் படிப்போர்க்கு வஞ்சகப் புகழ்ச்சியாகத் தோற்றினுஞ் சிசுபாலனுக்குப் புகழவேண்டுமென்கிற வெண்ணமே யில்லை. ஆதலா லிவைகளி னுட்பொருளை யாய்ந்தறிதல்வேண்டும்.

சேற்றிற் பிறந்த செங்கழு நீர்போலப்
பிரமற்குக் கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும்,
வசிட்டர்க்குச்சண்டாளி வயிற்றிற்பிறந்த சத்தியரும்,
சத்தியர்க்குப் புலைச்சிதோள் சேர்ந்து பிறந்த பரா
[சாரும்,
பராசரருக்கு மீன்வாணிச்சி வயிற்றில் பிறந்த வியா
(இந்நால்வரும்) [சரும்
வேதங்களோதி மேன்மைப்பட்டு
மாதவராகி வயங்கினரன்றே!

என்பது கபிலர் கூற்று. இது கடைச்சங்கப் புலவர்களு ளொருவராய கபிலரது கூற்றேயாயினு மாகுக; அன்றிப் பிற்காலத்திய புலவரொருவர் கபிலரென்னும் பெயர்புனைந்து கூறிய கூற்றேயாயினு மாகுக. எற்றேனு மிவ்வகவல் சிசுபாலனது கருத்தை விளக்கி நிற்கிறது. நின் பிறப்பிற் கேற்ப விழிசொற் கூறினை என்று பழித்தவா றுகும். நின்பிறவி தாழ்ந்திருந்தும் நீ யதனை யுயர்த்தியே கூறவா யன்றோ? அதேபோ லிழிந்தமொழியை யுயர்வாயும் பழுதற்றதென்றும் எண்ணியே கூறினைபோலும். நினக்குயர்வு வேதமோதிச் செயற்கையா லானமையி னிவ்வமயம் நின் இயற்கைக்குணந் தோன்ற மொழிந்தனை. சிசுபாலனும் கம்சனைப்போன்றே, அசுரகுலத்தா னாதலா லவனைப் பலவாறு புகழ்ந்து கூறினான். இத்தனைச் சிறப்பு வாய்ந்த கம்சனைக் கொன்றது ஏதோ முன்னைவினையின் பயனாலேயேயன்றிக் கிருஷ்ணனது வன்மையாலாகியதன்று. இவனைத் தெய்வப்பிறப்பா யெண்ணியுயர்த்திக்கூறினும் பிறந்தபின் னவன் துணைக்கேடின்றிக் கற்றமாயைகளா லன்னிலைக்குரியவனாகான். கற்ற வஞ்சனைகளெல்லாம் கஞ்சனாகிய மாபுருடனைக்கொல்லவேயாதலா லிவன் அக்கிரபூசைக் குரியவனல்லன்.

சொற்றவா நன்று சுகன்றிருத் தாதை
சூதிகைத் தோன்றிய பொழுதே
பெற்றதாய் தானும் பிதாவுமுன் வணங்கப்
பேசலா வுரையெலாம் பேசிக்
கற்றமா யையினாற் கன்னியங் கிருப்பக்
காரிருட் காளிந்தி நீந்தி
யற்றைநா ளண்ட ரானவர்க் கெல்லா
மரசனுக் கருமக வானான்.

[சுக முனிவரது தந்தையே! நீ சொன்ன சொல் நன்றாயிருந்தது. மகப்பெறும் அறையில் பிறந்தபொழுதே, தாயும் தகப்பனும் தன்னை வணங்க, சொல்லத்தகாத வார்த்தைகளை யெல்லாம் சொல்லி, தான் கற்ற மாயையினால், பிறந்த பெண்குழந்தை நந்தகோபன் மனையிலிருக்க, கரிய இருளில் யமுனையைக் கடந்து, இடையர்க்கெல்லாம் அரசனான நந்தகோபனுக்குப் பிள்ளையானான்]

ஐய! நீ சுகனது தந்தையாய்த் தோன்றினையே! சுகனோ பற்றுக்களனைத்தையும் அறவே யொழித்து முற்றத்துறந்த முனிவனல்லனோ? அவன் முறைகேடா யொன்றையுஞ் செய்யானாய், துகிலின்றி நீரா

டிய அரம்பையரை நோக்காஞய்ச் சென்றதொன்றே அவன் பெருமையை விளக்கும். நீயோ சிற்றின்பத்தினை விழைந்து அவனுக்குத் தந்தையாஞய். உலகப் பற்றுள்ளவஞதலால் மக்கட்குரிய குற்றங்களையெய்திநின்ருய்; ஆதலாற் பிழைத்தனை. நின் சொற்கள் முனிவனுக்குரிய புரையறு புனிதமொழிகளாகா. சுகனைப்பெற்றபோது பிழையிழைத்தது போன்றே முன்ஞெரு முறையும் புத்திரப் பிறவிக்குக் காரணஞயினை. இதோ நிற்கும் பாண்டவர்கஞன்வழித் தோன்றினவரல்லரோ? பேரன்மாராய அன்னவர்க்குத் துணைவஞன கிருஷ்ணனைச் சிறப்பித்துக் கூறிய தன் காரணத்தை யறிவதற்கு நெடுவழிச் செல்ல வேண்டியதில்லையே!

இந்த யாகத்தைச் சுகன் நடத்தியிருப்பின், இச்சமயம், பெரியோஞய அவன் கண்ணேஞட்டமின்றி, அனைவரு மேற்றுக்கொள்ளும் வண்ணந் தன்னெண்ணத்தை வெளியிட்டிருப்பன். அவனது தகப்பஞய் நீ தோன்றினையே! இது என்ன முறைகேடு?

[மறைந்துநின்று அம்பெய்த இராமன், வாலிமுன் தோன்றியவுடன், அவனு மிவ்வாறே பொங்கி

வாய்மையு மரபுங்காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே நீ பரதன்முன் ருேன்றிஞயே

என்று வன்சொல் சில கூறியது மிங்கே எடுத்துரைக்கத் தக்கது]

பிறக்கும்போதே கொடுவந்ததில்லை யென்ற முதியோர் வாக்கும் பிழைக்கும்வண்ணம் இவன் தோன்றியபோதே வஞ்சனையுடன் தோன்றினவன். பிள்ளையா யிவன்பிறந்தும் முதுகுரவ ரிருவரும் முறைகெட விவனை அன்றே முதலில் வணங்கினர். இவ்விடம் தோன்றியபோதும், பெரியவரும் உண்மைஞான முணர்ந்தவரும் முறைகெடப் புகலுவதென்ன புதுமை? பெற்ற தாயுந் தந்தையுமே, 'அப்பா! உன் செய்கைகளை யறிந்தோம். போதும்! போதும்! உன்னுருவினை மறை,' யென்று கும்பிட்டுக் கேட்டாராதலால் இவன் யோக்கியதையை யறியார் எவர்? பாம்பின் குட்டி நஞ்சோடு பிறப்பதுபோல், வஞ்சகத்தோடே தோன்றிய இவன், அன்னைக்கும் தந்தைக்குமவ் வஞ்சகத்தைப் பிறந்தஞான்றே கற்பித்தான். படிறஞகிய இவன் பேசொஞப் பேச்சிஞல் தாய்தந்தையருக்குப் பட்டிமை புகட்டலாஞனன்ருே! வசுதேவனு மிவனைச்சுமந்து யமுனையைக்கடந்து நந்தகோபன் மனைக்குட் சென்று, பிள்ளை மாருட்ட முண்டாக்கிஞன்? பிள்ளையாற் பிதாவும் குற்றவாளியாயிஞன். பிள்ளை தோன்றிப் பிதாவுக்குப் பணி செய்வதை விடுத்து, பிதாவை முதல்நாளே முறைகெடப் பணிவுடன் பணி செய்யச்செய்த துட்டனிவனே. பிறந்தபோதே மறைந்தொழுகும்படி பழிசுமந்திருந்த இவனே அக்கிரபூசைக் குரியவன்?

பாடிஞன் மறுகு பெருநகை விளைப்பப்
பாவையர் மனைதோறும் வெண்ணெய்க்
காடிஞ னவர்கண் முகந்தொறு மெச்சி
லாக்கிஞ னகன்றுமுன் ஞேட
வோடிஞ னவின் பேரிளங் கன்றை
யுயிருட ஞெருதனி விளவிற்
சாடிஞ னரவின் முதுகையும் புள்ளின்
ருஞவோ டலகையும் பிளந்தான்.

[தெருவெலாம் பிறர் நகைக்கப் பாடித்திரிந்தான். பெண்கள் வீடுகள்தோறும் வெண்ணெய்க்காகக் கூத்தாடிஞன். அவர் முகங்களி லெச்சில் செய்தான். இவனைவிட் டவர்களோட அவர் பின்ஞ லோடித்திரிந்தான். பசுவினது பெரிய கன்ருென்றை உயிரோடே விளாமரத்தின்மேல் வீசிக் கொன்ருன். ஒரு பாம்பின் முதுகையும், பறவையின் நாவொடு மூக்கையும்(பூதகியின் உயிரையும்) பிளந்தவனிவன்.]

வில்லி தன் வழிபாடு தோன்ற, சிசுபாலனது பழிமொழியாற் கண்ணனைத் தாம் பழிச்சுகிருர். ஆகையால் செய்யுளில் வார்த்தைகளுக்குரிய பொருளொடு புகழும், சிசுபாலனது உள்ளுறைபொருளொறுபுறமும் பொதிந்து கிடக்கின்றன. பாகவதக் கதை பிரசித்தமானபாடியா லக்கதைகளை யிங்கெடுத்தெழுதாது விடுகின்ருேம்.

கண்டார் சிரிக்க உடப்பெடுத்தவன் கண்ணண். தெருவெலாம் பாடித்திரிந்த சோமாரி, ஒருதுளி வெண்ணெய்க்குக் கூத்தாடினவன்;

'பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்திற் [கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் [விரித்து நீட்டி
மல்லெலா மகலவோட்டி மானமென்பதனை வீட்டி
இல்லெலா மிரந்த இழிவாளன்.

ஒரு சிறிது வெண்ணெய் கிடைப்பின் ஆனந்தக் கூத்தாடும் அற்பன். ஆண்மக்களிடம்போ யிரந்தாலொன்றும் கிடைக்காதென்றறிந்து அவர் அற்றம் நோக்கிப் பாவையர்மனை புகுந்தவன். குடிலஞகிய இவன் அவ்வாறு சென்றதும் குய்யத்தாலேயே யன்ருே? அது அவ்வாறென்பதை யவர் முகத்திலாக்கிய எச்சிலாலே விளக்கியுள்ளானே! தன் வாயுண்ட வெண்ணெயைக் காரிகையார் வாயிற்றடவி அவர்களே திருடியதாய்க் காட்டிய புரட்டன். இதனூறல் மாந்திய வொழுக்கத்தினன். அவரோடச் சுணங்கனே போற் பின்பற்றி விடாதுதொடர்ந் தோடியவன். அன்றிக் கன்று முன்னேடப் பின்னரோடி மாடு மேய்ப்பவன். இவன் வலிமை பொறுக்காதவரா யோடியொளித்தவரையும் நத்திச்சென்ற விடன். கம்சஞலேவப்பட்ட விளமரவுருவங்கொண்ட அசுரனைக் கன்றின் வடிவுகொண்ட வத்ஸாசுரனை மேலெறிந்து கொன்றவனென்பது அறியாதார் சொல்லும் மொழி. அங்ஙனங் கூறுவது பசுவைக் கொன்ற பெரும்பழியை மறைக்கவே என்பதை அறியீரோ? அதையு முயிருடன் வதைத்துக்கொன்ற வன்னெஞ்சன். குகையென்று வாயைப்பிளந்து தன்னைக் கொல்ல வந்த அரவத்தையும், கொக்கு வடிவங்கொண்டு வந்த அசுரனையும் கொன்றது தற்காக்கவென்பர். அவையாவும் பொய்ம்மொழிகளே. சிறிதும் இரக்கமற்றவன். பூததயை பச்சாத்தாப மென்பதே யவனிடமில்லை. பிராணிகளிடத்தன்பும் இரக்கமும் உயர்ந்தோர் மாட்டன்ருே காணப்படும்? அவற்றை யிவனிடமெதிர் பார்ப்ப தெங்ஙனம்? பலவகையிலும் தன்னிழிவு தோன்றவே நடந்துவந்த இவனை யாதுபற்றியோ முதன்மையாக வெண்ணச் சொன்னீர்?



# தமிழ்ப் பாடம் 94.

## [ அஷ்ட பிரபந்தம். ]

[ 806-வது பக்கத் தொடர்ச்சி ]

189077

### திருவரங்கத் தந்தாதி

தாளத் தனத்தத்தைச் சொல்லிய ரால்வருந்
தாழ்மலபா
தாளத் தனத்தத்தைத் தப்பநிற் பீர்புடை
தங்கியவே
தாளத் தனத்தத்தைத் தீர்த்தா னரங்கன்
சகடுதைத்த
தாளத் தனத்தத்தை யாயுதன் பாதந்
தலைக்கொண்மினே. 5.

பதப்பிரிவு:—தாளம் தனம் தத்தை சொல்லியரால் வரும் தாழ் மல பாதாளத்து அனத்தத்தை தப்ப நிற்பீர் புடை தங்கிய வேதாளத்தன் அ தத்தை தீர்த்தான் அரங்கன் சகடு உதைத்த தாள் அத்தன் அத்தத்து ஐ ஆயுதன் பாதம் தலை கொண்மின் ஏ.

பதவுரை.

தாளம்-கைத்தாளத்தின் உருவம்போன்ற, தனம்-முலைகளையும், தத்தை-கிளிபோன்ற, சொல்லியரால்-மொழிகளையும் உடைய மாதர்கள்பால்உள்ள மோகத்தால், வரும்-உண்டாகும், தாழ்-ஆழமான, மல-மலம் நிறைந்த, பாதாளத்து-நரகத்தினுடைய, அனத்தத்தை—ஆபத்திலிருந்து, தப்ப-தப்பித்துக்கொள்ள, நிற்பீர்-வேண்டி நிற்கின்றவர்களே!

புடை-பக்கத்தில், தங்கிய-தங்கியிருக்கின்ற, வேதாளத்தன்-பூதகணங்களையுடைய சிவபிரானது, அ-எல்லோரும் அறிந்த அந்த, தத்தை-ஆபத்தை, தீர்த்தான்-விலக்கினவனும்; சகடு-சகடாசுரனை, உதைத்த-உதைத்த, தாள்-பாதங்களையுடைய, அத்தன்-எமது தலைவனும்; அத்தத்து-தனது கைகளில், ஐ-ஐந்து, ஆயுதன்-ஆயுதங்களையுடையவனும் ஆன, அரங்கன்-ஸ்ரீரங்கநாதனது, பாதம்-பாதங்களை, தலைக்கொண்மின்-உங்கள் சிரமேற் கொள்ளுங்கள்.

கருத்து:—பெண்மோகத்தால் திகைப்புண்டு அல்லல் படுபவர்கள், இதனின்று தப்பவேண்டும் என்று முயன்ருலும் மனத்திடமின்மையால் மீண்டுமீண்டும் காமநினைவிற்கு ஆளாகி வருந்துகின்றனர். அன்னவரை நோக்கி நம் கவி, "உங்கள் சுயமுயற்சியால் மனத்தை முற்றிலும் அடக்கமாட்டாமை இயற்கையே. ஆதலால் அரங்கனைத் துணைவேண்டி அவன் பாதங்களைப் பற்றிக்கொள்ளுங்கள்; மற்றப் பற்றெல்லாம் தாமே உங்களை விட்டகலும்," என்று அறிவுறுத்துகின்றனர்.

விளக்கம்:—ஒவ்வோரடியிலும் முதலில் 'தாளத் தனத்தத்தை' என்னும் எழுத்துக்கள் யமகமாய் வந்திருக்கின்றன.

முதலடியில் அவை, தாளம் தனம் தத்தை, எனப் பிரியும். மாதர் முலைக்கு இளநீர்க்காய், பொற்குடம், யானைத்தந்தப், செப்பு, தாமரைமொக்கு வல் (சூதாடும் கருவி) முதலியவைகளை உபமானமாய்ச் சொல்வதுபோல், 'ஜாலர்' என்று சொல்லப்படுகின்ற கைத்தாளத்தையுங் கூறுவதுண்டு. தாளம் தனம் தத்தைச் சொல்லியர், என்பதற்கு 'தாளம்போன்ற முலையை உடையவர்களும் கிளிபோன்ற சொல்லை உடையவரும் ஆகிய மாதர்,என்று பொருள் சொல்லவேண்டும். அவ்வாறன்றித்"தாளம்போன்ற முலைகளையுடைய கிளிபோன்ற சொற்களையுடைய மாதர்" என்று தொடரின்போக்கிலேயே பொருள்விரித்து உரைத்தால், தாளம்போன்றமுலை கிளிக்கு இருப்பதாக ஏற்படும். பொருள் சொல்லுமிடத்து இவ்விதம் மயக்கம் உண்டாகாமல் சொல்வதற்குக் கவனத்தைச் செலுத்திப் பயிலவேண்டும்.

இரண்டாமடியில்—'தாளத்து அனத்தத்தை' எனப்பிரியும். இதனில் 'தாளத்து' என்பது முதலடியீற்றிலுள்ள'பா' என்பதோடு சேர்ந்து, 'பாதாளத்து' என ஆகும்; பாதாளம் என்பது சொல். இது ம் என்னும் எழுத்தை ஈற்றில் உடையதாகையால் வேற்றுமை அடைய 'அத்து' சாரியை பெற்றது, (lவது வால். 706, 949வது, பக்கங்கள்). ஆஞல் சாரியை மாத்திரந்தான் இருக்க ஆரும்வேற்றுமை உருபு தொக்கு இருக்கின்றது. அநர்த்தம், என்ற வடமொழி அனத்தம் எனத் தமிழில் வந்திருக்கிறது. இதுவும் அத்துச்சாரியையும் ஐ உருபும் பெற்று, அனத்தத்தை என ஆயிற்று.

மூன்ருமடியில்—'தாளத்தன் அ தத்தை' எனப்பிரியும். 'தாளத்தன்' என்பது இரண்டாவது அடியின் கடைசியிலிருக்கின்ற வே, என்னும் எழுத்தோடு சேர்ந்து, 'வேதாளத்தன்' என்ற ஒருசொல் ஆயிற்று. அதற்கு அடுத்த அ, என்பது சுட்டெழுத்து;—அந்த என்ற பொருளுடையது. தத்து - ஆபத்து, (கண்டம் என்று வழக்கத்தில் சொல்வதும் இது). 'சிவபிரானுக்கே உண்டான அந்தஆபத்தைத்தீர்த்தவன் அரங்கன்' எனப்பொருள்படும். சிவபிரான், பிரம்மன் தலையைக்கொய்து கையும்கபாலமுமாய்த் தொலையாத பிச்சை எடுக்கவேண்டி நேர்ந்தது ஒரு தத்து. 'யார்தலையில் கைவைத்தாலும் அவர் சாம்பராய்ப்போகும் வரம் வேண்டும்' என்று கேட்ட பஸ்மாசுரனுக்குச் சிவபிரான் அவ்வரத்தை ஓராது கொடுத்துவிட, அவ்வசுரன் சிவன் தலையிலேயே கைவைக்க வந்தபோது, இந்தக் கடவுள் ஓடவும் அவன் விடாமல் துரத்திவர, விஷ்ணு, மோகினிஉருவொடு இடையில்தோன்றி மோகம் விளைத்து, தான் நடிப்பதுபோல் அவன் நடிப்பானுயின் சேர்வதற்கிசைவதாகக்கூறி அந்நடனத்தின் ஓர் அபினயம்போல் விஷ்ணு தன் தலைமீது கைவைத்துக்கொள்ள, அவனும் அவ்வாறே தன் தலையில் கை வைத்துக்கொண்டதால் பெற்றுளவரத்தின்படி அவனை சாம்பராகித்தீர்ந்திடவே, சிவபிரானது தத்து இது ஒன்றும் திருமாலால் விலக்கப்பட்டது. இவைகளை யாரும் அறிவரென்ற எண்ணத்தில் இன்னதென்று குறிக்காமல், அத் தத்து, என்று சுட்டிவிட்டனர் கவி.இவ்விதம் விஷயத்தைக் குறிக்காமல், 'உலகம் அறிந்ததைச் சொல்வது ஏன்' என்னுங் கருத்தில் அ என்னும் சுட்டெழுத்து வரலாம். அவ்வாறு வரும் போது அதனை உலகறிசுட்டு என்று கூறுவார்.

நான்காவது அடியில்—தாள் அத்தன் அத்தத்து ஐ (ஆயுதன்) எனப்பிரியும். முதல் பதம், பாதம்என்னும் பொருளுடைய தாள் எனும் சொல். தாள் + அத்தன் = தாளத்தன், என உடல்மேல் உயிர்வந்து ஏறியது. அத்தன் + அத்தத்து = அத்தனத்தத்து என்று புணர்வதும் அவ்வாறே. கை என்ற பொருளுடைய ஹஸ்தம் என்ற வடமொழி தமிழில் 'அத்தம்' என்றாயிற்று.

குறிப்பு:—ஐ + ஆயுதன், என்பது இ ஈ ஐ வழி யவ்வும், என்ற விதிக்கிணங்கி யகர உடம்படுமெய் வந்து, அந்த மெய்யின்மேல் வரும் உயிர்ஏறி ஐ + ய் + ஆயுதன் = ஐயாயுதன் என ஆயிற்று.

மாதங்கத் தானை யரங்கனை வஞ்ச
னிலங்கையிலே
மாதங்கத் தானை யிருதிங்க டாழ்த்துப்பின்
வாம்பரிதேர்
மாதங்கத் தானை வலத்தானை முன்வதைத்
தானைத்தன்பான்
மாதங்கத் தானை வைத்தானை வைத்தேனென்
மதியகத்தே. 6

பதப்பிரிவு:—மா தங்கம் தானை அரங்கனை வஞ்சன் இலங்கையில்ஏ மா தங்க தான் ஐ இரு திங்கள் தாழ்த்து பின் வாம் பரி தேர் மாதங்கம் தானை வலத்தானை முன் வதைத்தானை தன்பால் மாது அங்கத் தானை வைத்தானை வைத்தேன் என் மதி அகத்தே.

பதவுரை

மா - சிறந்த, தங்கம் - பொன்மயமான, தானை ஆடையை அணிந்த, அரங்கனை - அரங்கனாகிய திருமாலை;

வஞ்சன் - வஞ்சகனான இராவணனது, இலங்கையில் - இலங்கையிலே, மா - இலக்குமியாகிய சீதாபிராட்டி, தங்க - இருக்க, தான் - தான், ஐ யிரு - பத்து, திங்கள் - மாதங்கள், தாழ்த்து - பொறுத்திருந்து; பின் - பிறகு, வாம் - தாவுகின்ற, பரி - குதிரைகளும், தேர் - இரதங்களும், மாதங்கம் - யானைகளும், தானை - காலாட்படைகளும் ஆகிய, வலத்தானை பலமுடைய அந்த இராவணனை, முன் - முற்காலத்தில், வதைத்தானை - வதைத்த இராமனாக அவதரித்த அந்தத் திருமாலை;

மாது - உமாதேவியை, அங்கத்தானை - தன் உடலில் வைத்திருக்கின்ற சிவபிரானை, தன்பால் - தன்னுடைய வலப்பாகத்தில், வைத்தானை - வைத்திருக்கின்ற திருமாலை;

என் - என்னுடைய, மதிஅகத்தே - மனதிற்குள்ளே, வைத்தேன் - ஒருபோதும் நீங்கவிடாமல் வைத்திருக்கின்றேன்.

கருத்து :—சிவபிரானைத் திருமால் தன் வலது பக்கத்தில் வைத்திருக்கின்றார் என்பது மரபு. சிவபிரான் உமையைத் தன் இடப்பக்கத்தில் வைத்திருக்கின்றார். உமையை வைத்திருக்கின்ற சிவபிரானை வைத்திருக்கின்ற திருமாலைத் தான் தன்னுடைய மனதில் வைத்திருப்பதாகச் சொல்லி மகிழ்கின்றார் கவி. இவ்விதம் ஒன்றன்மேல் ஒன்றாய் உரைத்துக்கொண்டு போவது ஸாராலங்காரம் எனப்படும் **மேன்மேலுயர்ச்சியணி.** இதன் இலக்கணத்தை விரிவாக,(வால்யூம் 2, 693வது பக்கத்தில்) 'மறிக்குங்கயற்கண்ணி' என்று தொடங்குகின்ற திருவரங்கத்துமாலைச்செய்யுளின்கீழ், சொல்லியிருக்கின்றோம்.

விளக்கம்:—மாதங்கத்தானை, என்பன, வெவ்வேறு விதமாய்ப் பிரிந்து அடிதோறும் வெவ்வேறு பொருள் தரும்படி வந்திருப்பதால், இது யமகம் ஆகும். முதலடியில்—மா தங்கம் தானை, என அவை பிரியும். மா என்பது சிறந்த எனனும் பொருளுடைய உரிச்சொல். தானை - வஸ்திரம்; இதுவே ஆனை என்பது போல் முதல்வேற்றுமை உருவம். ஐயில் முடிவதால் இரண்டாம் வேற்றுமையோ என்று மயங்கவேண்டா. இரண்டாம் வேற்றுமை உருபுபெற்றால் 'தானையை' எனவரும். "முன்றில் தனின்மேல் படுக்க முன்தானையும் இன்றி" என்று முன் (1-வது வால்யூம் 807-வது பக்கத்தில்) நளவெண்பாவில், தானை என்பது ஆடை என்ற பொருளில் வந்திருக்கின்றது. 'தானை அரங்கனை' என்பது, ஆகையால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை—தானையை அணிந்த அரங்கன் என விரியும். தங்கத்தானை என்பது பீதாம்பரம். "அலங்காரப் பிரயோ விஷ்ணு" என்பதற்கிணங்கப் பீதாம்பர தாரியாகிய ஸ்ரீரங்கன், என்கின்றார் கவி. தானை + அரங்கனை = தானையரங்கனை, என ய் உடம்படுமெய்யாக ஐக்குப்பின்வந்தது.

இரண்டாமடியில்—மா தங்க தான் ஐ (இரு)எனப் பிரியும். மா என்பது இங்கு இலக்குமி என்னும் பொருளுடைய பெயர்ச்சொல்; தங்க, வினையெச்சம்; தான் என்பது இராமனைக் குறிக்கின்றது. இந்தத் தானை என்பது தான் என்பதன் இரண்டாம் வேற்றுமை அன்று. தான் என்பதன் இரண்டாம் வேற்றுமை, 'தன்னை' என்று ஆகும். ஆகையால் அந்த ஐ இரண்டாம் வேற்றுமை உருபன்று; ஐந்து என்பதன் விகாரம் அந்த ஐ. தான் + ஐ = தானை, என, மெய்யின்மேல் வருமொழி உயிராகிய ஐ ஏறிற்று. ஐ + இரு = ஐயிரு என யகர உடம்படுமெய் வந்தது.

மூன்றுமடியில்—மாதங்கம் தானை, எனப்பிரியும். மதங்கமுனிவரிடமிருந்து பிறந்ததால் யானைக்கு மாதங்கம், என்ற பெயருண்டு. தானை, என்பது, சைந்நியம் என்றிருக்கின்ற இன்னொரு பொருளில் இங்கு வந்திருக்கின்றது.

நான்காவது அடியில்—மாது அங்கத்தானை, எனப் பிரியும். உமையாகிய மாதை அங்கமாக உடைய சிவபிரானை, என்பது பொருள். அங்கத்தானை, இரண்டாம் வேற்றுமை. அந்த அடியில் வருகின்ற 'வைத்தானை' என்பது வைத்தவனை, என்ற பொருள் தருகின்ற இரண்டாம் வேற்றுமை வினையாலணையும் பெயர். வினையாலணையும் பெயரின் இலக்கணம் (1-வது வால்யூம், 243, 770-வது பக்கங்களில்)கூறப் பட்டிருக்கின்றது.

## இலக்கணம்

வகர மெய்யும் யகர மெய்யும், உடம்படுமெய்களாக நிலைமொழிஉயிரும் வருமொழிஉயிரும் புணரும் போது வருகின்ற இடங்களைப் பார்த்தோம். அதனில், ஏ என்பது நிலைமொழியாயிருந்து வருமொழி முதல் உயிரொடு புணருங்கால்,பெயர்ச்சொல்லாயிருக்குமானால், வகர உடம்படுமெய்யும், இடைச்சொல்லாயிருக்குமானால் யகர உடம்படுமெய்யும் வருமென்று, "ஏமுன் இருமையும்" என்றதைவிவரித்தோம். இவ்விதம்சிறப்பாக விதிபெற்றிருக்கிற சொல் தமிழில் மா என்பதும் ஒன்று. இது'ஆ' என்னும் உயிரீற்றுச்



சொல்லாகையால், வருமொழி முதலில் வரும் உயிரொடு புணரும்போது, ஏனையுயிர்வழி வவ்வும்,என்ற விதிக்கிணங்க வகர உடம்படுமெய் மாத்திரம்பெறுதல் வேண்டும். எனினும், ஏஎன்னும் சொல்லைப்போல், மாவென்னும் சொல்லும் யகரஉடம்படுமெய்யை ஒருசமயமும் வகர உடம்படுமெய்யை மறுசமயமும் பெறலாகின்றது. மா, என்பது 'மா தங்கத்தானை' என்றதில் போல்'சிறந்த' அல்லது'பெரிய'என்றபொருளுடைய உரிச்சொல்லா யிருக்கலாம்; அல்லது, இலக்குமி மாமரம், மிருகம், என்பனபேன்ற பலபொருள்களைத்தருகின்ற பெயர்ச்சொல்லா யிருக்கலாம். நிலைமொழி மா உரிச்சொல்லாயின்,அது வருமொழிமுதல் உயிரொடு புணரும்போது, ஏனையுயிர்வழி வவ்வும் என்றதற்கிணங்க வகர உடம்படுமெய் வாராமல், யகர உடம்படுமெய்யே இலக்கியங்களில் வரக் காண்கிறோம்:—

மா + இரு = மா ய் + இரு = மாயிரு,என்றாகின்றது. (மா = பெரிய, இரு = விசாலமான). இங்கு மா என்பது உரிச்சொல்.

"மாயிரு விசும்பின்கங்கை மண்மிசை இழித்தோன் மைந்த" என்று கம்பராமாயணத்திலும், "மாயிரு ஞாலந்தன்னில் மகம்பல இயற்றிப்பெற்ற" என்று நைடதத்திலும் பயின்றிருக்கக் காணலாம்.

ஆனால், மா என்பது பெயர்ச்சொல்லாயின் முன்னுரைத்த விதிகளின்படி வகரமே உடம்படுமெய்யாக வரும்:—

மா + அமரும் மலர் = மா வமரும் மலர்(இலக்குமி)

மா + இலை = மாவிலை = (மாமரம்)

மா + உறையும் காடு = மாவுறையுங்காடு (மிருகம்)

'மாவியல் நோக்கினள்' (மா + இயல் = மாவியல், மாவடுஅனைய கண்ணையுடையவள்) என்று கம்பராமாயணத்தில் வந்திருக்கின்றது.

இனி, அரசன் அல்லது கடவுள் என்ற பொருளுடைய 'கோ' என்னும் ஓரெழுத்து ஒருமொழி யிருக்கின்றது. இதன்பின் உயிர்வரின், 'ஏனை யுயிர்வழி வவ்வும்' என்றபடி வகர உடம்படுமெய் தோன்றும்:—கோ + அழைத்தான் = கோ + வ் + அழைத்தான் = கோவழைத்தான். கோ + ஏ = கோவே. (அரசனே). ஆனால், கோ என்பதன்பின் 'இல்' என்ற சொல் வருமாயின்,கோ + இல் = கோயில் கோவில்,என இருவிதமாகவும் வழங்குவதுண்டு. கோயில் கோவில், என்ற இவ்விரண்டிற்கும் அரசனுடைய வீடு (அல்லது கடவுளுடைய வீடு) என்பது பொருள். ஆகையால் யகரம் வகரம் இரண்டும் வரக்காண்கின்றோம். எனினும் 'கோ' என்ற சொல் இரண்டு உடம்படுமெய்யையும் பேதமில்லாமல் ஏற்கும் என்று எண்ணப்படாது.அது இலக்கணப்படி ஏற்பது கோவில், என வகர உடம்படுமெய்யே யாகும். எனினும், இலக்கணத்திற்கு இணங்கிய கோவில் என்னும் அந்தச் சொல் அநாதிகாலமாய்க் கோயில் என்றும் வழங்கப்பட்டுவருகிறது.எனினும்,கோயில் என்பதிலுள்ள யகரமெய்உடம்படுமெய் அன்று. கோவில் என்பதிலுள்ள வகர மெய்யே உடம்படு மெய். இவ்விதம் இலக்கணமுடைய ஒரு வழக்கிற்கு இணையாய், இலக்கண மில்லாத இன்னொரு வழக்கு ஒருங்கே யேற்பட்டதுபோல் பண்டைக் காலத்தில் தோன்றி இரண்டும் வித்தியாசமின்றிப் பயின்று வருமாயின், அவை இலக்கணப்போலி என்னும் இயல்பு வழக்கில் அடங்கும். தமிழில் சொற்கள் வழங்கிவருகின்றதற் குரிய தன்மைகளையும், அதனில் 'இலக்கணப்போலி'யைப் பற்றியும் முன் (1வது வால்யூம், 808வது பக்கத்தில்) விரிவாக உரைத்திருக்கின்றோம். கோவில், என்பது இலக்கணமுடையது, அதன் இலக்கணப்போலி, கோயில்; ஆதலின், 'கோயில்' என்பதிலுள்ள யகரமெய்யை உடம்படுமெய் என்று கூறப்படாது.

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

## 19. உலாவியற் படலம்.

இராமனைக் காண வீழும் மாதரார் திறந்தா னென்னே.

**க**ம்பருக்குந் தோலாத மொழியுடைய தேவர், தம் சூளாமணிக் காப்பியத்தின் தலைவன் விசயனை யுரைத்தவாங்கு இராமன், இன்று "வரிவளைத் தோளியர் மனத்துட் காமநோய் எரிவளைத் திடுவதோர் இளமை" எய்தியவனாயதால், ஆன்ற செல்வமும் அரசரும் உடன்வர மிதிலை வீதி வாய் அவன் போதருமெல்லையில், அக்காட்சியைக் காணுமோர் காதலுந்த,

816 பக்கத் தொடர்ச்சி.

மானினம் வருவபோன்று மயிலினந் திரிவபோன்று
மீனின மிளிர்வபோன்று மின்னின மிடைவபோன்றுந்
தேனினஞ் சிலம்பியார்ப்பச் சிலம்பினம் புலம்பவெங் [கும்
பூநனை கூந்தன்மாதர் பொம்மெனப் புகுந்துமொய்த் [தார்

[பூவின் தேனால் நனைந்திருக்கின்ற கூந்தலையுடைய மாதர்கள், மான் கூட்டங்கள் வருவனபோன்றும், மயில் கூட்டங்கள் திரிவனபோன்றும், நட்சத்திரங்கள் பிரகாசிப்பதைப்போலவும், மின்னல் கூட்டங்கள் அடர்வனபோலவும், வண்டுக்கூட்டங்கள் ஆரவாரம் செய்யவும், சிலம்புகளெல்லாம் சப்திக்கவும் விரைவாகவந்து எங்கும் மொய்க்கலாயினர்]

மானும் மயிலும் மீனும் மின்னுமெனத் தம்மழகு தோன்ற வந்தா ரிவரெனினும்,

விரிந்துவீழ் கூந்தல் பாரார் மேகலை யற்ற நோக்கார்
சரிந்துவீழ் துகில்க டாங்கா ரிடைதடு மாறத் தாழார்
நெருங்கினர்நெருங்கிப்புக்குநீங்குமினீங்குமின்னென்
றருங்க மனைய மாதர் தேனுக லயின் மொய்த்தார்.

[விரிந்து விழுகின்ற கூந்தலைக்கருதாமலும், மேகலாபரணம் அறுந்து உதிர்வதை மதியாமலும், சரிந்து நெகிழ்கின்ற ஆடைகளைத் தாங்காமலும், இடை துவள்வதற்குத் தாமதியாமலும், ஒருவர்மேல் ஒருவராய் நெருங்கிப்புகுந்து, 'விலகுங்கள் விலகுங்கள்' என்று, பெறுதற்கரிய அணிகலன்கள் போன்ற அம்மாதர் தேனைப் பருகுகின்ற வண்டுகள் என்னும்படி மொய்த்தார்]

என்றதால் இராகவன் அழகிற்கே அவர் ஆவலுறலாயினர். இம்மிதிலைமாதரும், கண்ணபிரானைப் பின்னாள் காணவரும் விரைவினில், 'விரைகமழ் தூநீராடி விரிதுகில் வேறுடாமல், தெருவெலாந் தாமே யாய'' இந்திரப்பிரத்தத்து நங்கையரைப்போல், இருந்தவர் இருந்தபடியே எழுந்தோடி வந்தவர்களாதல்வேண்டும். மற்று, உலாவருஞ் சீவகனைக் காணுவான் விரைந்தவத் தெரிவையரிற்சிலர் தமது கோலத்தைத் திருத்திக்கொண்டே வெளிப்போதர வுன்னினராகி,

> பொன்னரி மாலை பூண்டு
> பூஞ்சிகை குலாவி முன்கை
> மின்னரிச் சிலம்பு தொட்டு
> விருப்பொடு விரைந்து போவான்
> கன்னிய ராடி நோக்கித்
> தம்மைத்தாங் கண்டு நாணிப்
> பின்னவை யணிந்து செல்வா
> ரிடம்பெறு தொழிந்து போனார்.

[சிகையில் அணியும் நினைவோடு பொன்னரிமாலையைக் கழுத்திலே பூண்டும், காலில் அணியவேண்டிய சிலம்பை முன்கையி லணிந்தும் கன்னியர் விரைந்து போகுங்கால், கண்ணாடியில் தம் உருவத்தைக்கண்டு நாணங்கொண்டு, பிறகு அவைகளை ஏற்றபடி மாற்றி அணிந்துசெல்லக் காலந் தாழ்த்ததால் சனத்திரளிற்கிடையே இடம்பெறாதவராகி மீண்டனர்]

கருத்தொன்று வைத்து வேறோர்கருமத்தில் விரைந்தவர் யாரே முந்தினார்! இப்பிழை யிழைத்திலர் மிதிலைவாழ் மாதர். அன்னதற்கு அவர்தம் அறிவேயன்றி வீதியிற்சென்ற பெருமகன்தன் தன்மையும் காரணமாதற்கூடும். கண்ணனும் இராமனும் கடவுளே யாதலால், அதனை அறியாராயினும், அவர்தமைக் காட்சிகொள்ளச் சென்றவர் தந்நினைவு துறந்தாராதல் இயற்கையே. மானுடனொருவனைக் காணுங் கொள்கையிற் சென்ற மாதரோ தம்மழகு மறவாதிருந்ததுந் தக்கதாயது.

இந்நணம், வருவதன்முன்னரே தம்நினைவற்ற மிதிலாபுரி மங்கையர்,

> கண்ணினாற் காத லென்னும்
> பொருளையே காண்கின் றேமிப்
> பெண்ணினீர் மையினா லெய்தும்
> பயனின்று பெறுது மென்பார்
> மண்ணினீ ருலர்ந்து வான
> மழையற வறந்த காலத்
> துண்ணுநீர் கண்டு வீழு
> முழைக்குலம் பலவு மொத்தார்.

[காதல் என்ற அத்தன்மையே இன்று கண்ணால் காணத்தகுந்த உருவம்பெற்று இவ்விராகவனாக வரக் காண்கின்ற நாம், பெண்ணாய்ப் பிறந்ததால் எய்தவல்ல பயனை இன்றைக்கு அடைவோம் என்பவராய், பூமியிலுள்ள நீரெல்லாம் வற்றி வானமும் மழைபெய்யாது வருந்தும் காலத்தில் உண்ணுதற் குரிய நீரைக்கண்டால் மான் கூட்டம் எவ்வளவு வேட்கையோடு அந்நீரை உண்ணுதற்குத் துன்னுமோ அவ்வாறே இவர்களும் அடர்ந்தார்]

அதுவுமன்றி,

> பள்ளத்துப் பாயு நன்னீ
> ரனையவர் பானல் பூத்த
> வெள்ளத்தும் பெரிய கண்ணார்
> மென்சிலம் பலம்ப மென்பூத்
> தள்ளத்தம் மிடைக ளோவத்
> தமைவலித் தவன்பாற் செல்லும்
> உள்ளத்தைப் பிடித்து மென்ன
> வோடுகின் றாரு மொத்தார்.

[நீலோற்பலம் பூத்திருக்கும் பாற்கடல் ஒன்றுண்டாயின் அதுபோல் கருவிழியோடு கூடிய பெரிய கண்களையுடைய மாதர், பள்ளத்தில் பாய்கின்ற நல்ல நீர்போன்ற தன்மையவராகி, மெல்லிய சிலம்பு ஒலிக்கும்படி, தம் தாமரை போன்ற பாதங்கள் தடுமாறவும் தம் இடுப்பு நோகவும், பற்றியிழுக்கின்றவனிடம் விரைந்துசெல்லும் தம் மனத்தைப் பிடித்து நிறுத்திக்கொள்வோம் என்று தொடர்ந்து ஓடுகின்றவர்களையும் ஒத்தார்]

பின்னுஞ் சிலர்,

> அரத்தமுண் டனையமேனி யகலிகைக் களித்ததாளும்
> விரைக்கருங் குழலிக்காக வில்லிற நிமிர்ந்து வீங்கும்
> வரைத்தடந் தோளுங் காண மறுகினில் வீழு மாதர்
> இரைத்துவந் தமிழ்தின் மொய்க்கு மீயின மென்ன
> [லானார்.

[செந்நிறம் விளங்குகின்ற அகலிகைக்கு அருள்செய்த பாதங்களையும், வாசனை பொருந்திய கரிய கூந்தலுடைய சீதையின்பொருட்டு வில் உடையும்படி உயர்ந்து பருத்த மலைபோன்ற பெரிய தோள்களையும், காணவிரும்பி வீதியில் நெருங்குகின்றமாதர், ஒலித்துக்கொண்டுவந்து அமிர்தத்தை மொய்க்கும் ஈக்கூட்டங்கள் என்று கூறத்தக்கவ ரானார்]

இன்னவாறு வீதிவாய் எய்தி மொய்த்தவர்களுள்,

> பயிரொன்று கலையுஞ் சங்கும்
> பழிப்பறு நலனும் பண்பும்
> செயிரின்றி யலர்ந்த பொற்புஞ்
> சிந்தையு முணர்வுந் தேசும்
> வயிரஞ்செய் பூணு நாணு
> மடனுந்தன் னிறையு மற்று
> முயிரொன்று மொழிய வெல்லா
> முகுத்தொரு தெரிவை நின்றாள்.

[ஆசைபிறந்த தெரிவைப்பருவத்து ஒருத்தி, தன் ஒலிக்கின்ற மேகலை என்னும் ஆபரணத்தையும், வளையல்களையும், பழிப்பிலாத தன் அழகையும், குணங்களையும், குற்றமின்றிப் பிரகாசிக்கும் பொலிவையும், மனத்தையும் உணர்வையும், தேஜஸையும், வயிரமிழைத்த ஆபரணங்களையும், வெட்கத்தையும், மடமையையும், மனதை அடக்கிக்காக்கும் நிறையையும், உயிரைத்தவிர, மற்றெல்லாவற்றையும் சிந்திவிட்டுநின்றாள்.]

இன்னவராரிவையர் எத்தனையோ பலர். வேறொருத்தி,

> சொன்னலங் கடந்த காமச்
> சுவையையோ ருருவ மாக்கி
> இன்னலந் தெரிய வல்லார்
> எழுதிய தென்ன நின்றாள்
> பொன்னையும் பொருவு நீராள்
> புனைந்தன வெல்லாம் போகத்
> தன்னையுந் தாங்க லாதாள்
> துகிலொன்றுந் தாங்கி நின்றாள்.

[சொல்லின் அழகாகிய வர்ணனைகளின் எல்லையைக் கடந்த காமம்என்னும் சுவையையே கண்ணுக்குத்தெரியும் ஒரு உருவம் ஆக்கி, இனிமையின் நன்மையைத் தெரிந்தறியும் ஓவியர் எழுதிய சித்திரம் என்று நின்று, இலக்குமிக்கு நிகரான அவள், அணிந்தன வெல்லாம் அகன்றும் தன்னைக்கூடத் தாங்கமாட்டாதவளாய் நெகிழ்கின்ற ஆடையை மாத்திரம் கைகளில் தாங்கி நின்றாள்.]



இவையனைய சில பாசுரங்களாற் கம்பர், அந்நன்னர்நங்கைமார் இராமனைக் காணுமாவிரைந் திடைந்து நின்ற நிலையினைச் செப்புவார். மெய்ம்மறந்து உணர்வும் பிறிதாகி இவர் செய்தனவும் சொல்லினவும் பற்பல. அழகுடையொருவன் அகன்மறுகிற் சென்றானெனின், மாதர் தங்கள் உடன்பிறந்த நிறையையும் நாணையும் உகுத்துவிட்டு வேட்கையா லலையுமிது பெண்மைக் கழகாமோ என்னுமோர் ஐயம் எழுதற்பாலதே. காப்பியத்தலைவனைக் காணுங்கால் காரிகையாயினோரெலாம் இவ்விதமே பழிப்புற ஒழுகினாரென்று பெருங்காவியங்கள்தோறும் உலாவெனுமுறைப்பில் புலவர்யாவரும் ஒருவரையொருவர் பிந்தலின்றிப் பலபடப் புகல்கின்றனர். ஏனையோர் இது இயம்புவதனமைதி யாவதேயாயினும், கம்பரும் இவ்வகை இழிவென நினைக்கலாகும் கருத்தொன்றைக் கழறுவாரோ. கண்ணிற் காண்பரேல் ஆடவரும் பெண்மை அவாவும் தோளினான் இராமன் ஆதல் பற்றியே, மற்றுப் பிள்ளைபெருமாள்ஐயங்கார் புகழ்ந்தபடி, இராகவன் வடிவுகண்டால் மன்மதனும் மடவாராக ஆதரம் செய்யலாமெனினும், பெண்டிர்தாம் தம் நாணும் நிறையும் நினையாது நீத்தல் ஒண்ணுமோ! எதிர்வரும் ஆடவன்தன் பொற்பின தளவன்று, காண்குறும் மாதர்தம் கற்பின் பொறுப்பு. இன்னபல சிந்தித்து, மிதிலைமாதர் புரிந்தவத் தகவிலாச்செயல்களைக் கண்டுவெள்கினராய்ச் சிலர், இராமன் உலாப் போந்தது அந்நகர்ப் பரத்தையர்வாழ் வீதியி லாதல் வேண்டும் என்று அமைதி நாடலாம். இவ்வுலாவியற் படலத்தில் யாதுமோ ராதாரம் இதற்கின்மையோடு அகநக ரரசமறுகினி லிராமனை உலாக்கொண்டுய்த்தலின்றிப் புறநகர்ப்பரத்தையர் தெருவூடவனைத் தேர்ந்தழைத்துச் செல்வாரெனல் நேரென்றுநினைத்த லருமை. மற்று இவ்வகை, அயோத்தியி னிளம்வேந்தனதழகில் விழைந்து வீழ்ந்தவர் வதுவையி லின்னும் படிந்திராக் கன்னியரேகொலோ வென லொருசார் எண்ணலாம். பரத்தையரென்ற கொள்கையிலுமிது ஒரு சிறிது ஏற்றமுடைத்து. கன்னியராயினும், காண்டகு காளையர்க் காண்டொறும் கைக்கிளையெய்துதல் மரபன்று.

மிதிலைக்கோ புதியோனிவ் விராமன்; மணமும் முடிந்திரா முருகச் செவ்வியன். புதியனகண்டபோது விட்டிடாப் புதுமைபார்ப்பார்பெற்றியி லிம்மிதிலை மாதர் இவ்வண்ணம் இயங்கினர் என்பதற்கொண்ணாமல், பன்னெடு நாட்களுக்குப்பின், முடிபுனை திருநலம் முடிக்கமுன்னிய தயரதன் இவனைத் தன்வயின் தருவித்தபோது, வீதிவாய்ப் பொன்னெடுந் தேர்மிசைச் சென்றானை,வைகலுங் கண்டுகண் டிவனெழில் கற்றுள அயோத்திமாதரும் அத்தினமும்,

> .........நிறைப்பேர்
> அணைநி ரைந்தன வறிவெனும் பெரும்புன லனையார்
> பிணைநி ரைந்தெனப் பரந்தனர் நாணமும் பிரிந்தார்.

[அறிவென்னும் பெரும் நீர்நிலையானது, நிறை என்று சொல்லப்படுகின்ற அணையின்மீது பொங்கி நிரம்பியதொத்த தன்மை யுடையாராகி, மானினம் வரிசைப்பட வந்ததென எங்கும் பரவி, நாணமும் நீங்கினவ ரானார்.]

என்பார் கம்பர். அதுவுமன்றி அவனை ஆசையோடு பார்க்கின்ற கண்களின் திறத்தை,

> நீளெ ழுத்தொடர் வாயிலுங் குழையொடு நெகிழ்
> ஆள கத்தினோ டாமிய தலத்தினு மலர்ந்த [ந்த
> வாள ரத்தவேல் வண்டொடு கெண்டைகள் மயங்
> சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள். [கச்

[நீண்ட தூண்கள் உயர்ந்த வாயில்களிலும், தளிர்த்த கொடிகள் படர்ந்த முன்றில்களிலும், நிலாமுற்றங்களிலும், பலகணிகளிலும் தோன்றிய, மாதர் முகங்களாகிய தாமரை மலர்களில், இராமனது அவயவங்களின்ஒன்றொன்றேபிரித்து நோக்குவதால் வாள்போன்ற கண்கள் சிலவும், அவனது மலைபோன்ற தோளில் உருவநோக்குவதால் முருகவேளின் கடம்பமாலை சூட்டிய வேல்போன்ற கண்கள் சிலவும், அவன் கை வாய் கண்களாம் பங்கயங்களில் மொய்த்துத் தொடர்வதால் வண்டுகள்போன்ற கண்கள்சிலவும், அவனது கடலனைய திருமேனி முழுவதும் பாய்ந்து புரள்வதால் மீன்போன்ற கண்கள் சிலவும்,—விரவி விளங்கலாயின.]

என அம் மந்திரப்படலச்செய்யுளில் கம்பருக்கே உரிய நயங்களோ டுரைத்திருக்கக் காணலாம். அவ்வயோத்திமாதரது அறிவு இராமனைக் கண்டவளவில் நிறையெனும் வரம்பளவு நிரம்பிவிட்டது, அவர் நாணமும் பிரிந்தார், அவர் கண்கள் இராமனை நயந்து நோக்கின, என்பனவோ டமையாமல்,

> மண்ட லந்தரு மதிகெழு மழைமுகி லனைய
> அண்டர் நாயகன் வரைபுரை யகலத்து ளலங்கல்
> தொண்டை வாய்ச்சியர் நிறையொடு நாணொடுந் [தொடர்ந்த
> கெண்டை யும்முள கிளைபயில் வண்டொடுங்கிடந்த

[வட்டமாகிய சந்திரன்போன்ற முகத்தோடு பொருந்திய கார்மேகம்போன்ற தேவதேவனான இராமனது மலைபோன்ற மார்பில் அசைந்த மாலையினுள், கொவ்வைக் கனிபோன்ற வாயைஉடைய மாதரது நிறையோடும் நாணோடும் சேர்ந்து தொடர்ந்த கண்களாகிய கெண்டையும், அம்மாலையில் உள்ள இசைபாடுகின்ற வண்டுகளோடு கலந்துகிடந்தன]

என்ற வாற்றால், அயோத்திமாதரும் தம் நிறை நாண் முதலிய பெண்வழி நலங்களையும் அவன்பால் துறந்து போக்குமோர் பரிசு தெரியலாகின்றது. பின்னும், தொடங்கிய தன் சூழ்வினை முடியக்காணுவாள் கேகயன்மகள தேவலில் இராமன் அவள்வயினெய்த மறுகிற் சென்றகாலையும், அவ்வணிநகர் அணங்கனார்,

> சுண்ணமு மலருஞ் சாந்துங் கனகமுந் தூவ வந்து
> வண்ணமே கலையும் நாணும் வளைகளுந் தூவு வாரும்
> புண்ணுற வனங்கன் வாளி புழைத்ததம் புணர்மென் [கொங்கை
> கண்ணுறப் பொழிந்த காம வெம்புனல் கழுவு வாரும்

[சுண்ணப்பொடியும் மலரும் சந்தனமும் தங்கப்பொடியும் அவன்மீது சொரிந்திட வந்தாரேனும், அவனதழகால் இழுப்புண்டு தம் அழகிய மேகலாபரணத்தையும், இளைக்கின்ற தம் கைகளிலிருந்து வளைகளையுமே சிந்திவிடுவாரும், புண்ணுண்டாம்படி மன்மதனது அம்புகள் துளைத்த தம் நெருங்கிய மெல்லிய முலைகளை, காமத்தால் தம் கண்ணிலிருந்து கரிந்துவிழுகின்ற வெந்நீரால் கழுவுவாருமாயினர்]

ஆதலின், அயோத்தியிலும் கணிகையர் வீதிக்காரியமே இதுவெனக்கடப்பதெனில், இராமன் செல்வதாயின் எந்நகரிலும், பரத்தையர்வழியலால் செல்லக் கற்றிலன் என்னும் பான்மையதாய் முடியும். மிதிலையின் வனிதையர் இன்று பட்டவோர் கதியினை அயோத்திவாழ் மாதர் என்றுமே படலாகின்றனர். ஒழுக்கமுடைய மங்கைமார்க்கிது விழுப்பமாமோ! 'காசலம்பு முலையவர் கண்ணெனும் பூசலம்பும் நெறியின் புறஞ்செலாக் கோசலம்' என்ற நிகழ்ச்சி பொய்யோ! கணவர்மார் இதனைக் கண்டிருந்தார்கொலோ! ஏற்றபெற்றி, தம் கற்பினை ஏந்துதல் நாரியர்க்கொரு நல்லறமேயோ!

# மானத சாத்திரம்

## PSYCHOLOGY

ஏதேனும் ஒரு பொருளைப்பற்றி நாம் அறிந்துள்ள கொள்கைகளை எல்லாம் முறையாகக் கோவை செய்து வெளியிடுவதே நூலாகும். நூலோ பலவகை. அறிவிற்கு விளங்குவனவற்றைக் கோவைசெய்யும் நூல்களை அறிவு நூல்கள் எனக் கூறலாம். இவ் வறிவு நூல்களோ இருதிறத்தனவாக விளங்குகின்றன. உலகத்துப் பொருள்களின் உண்மைத்தன்மையை ஊடுருவி ஆராய்வன ஒருபுறம் உலவுகின்றன. "தோன்றுகின்ற இவ்வுலகம், தோற்றத்தினும் வேறாக அமைந்துள்ளதா? தோற்றத்தினளவாகவேநின்று ஒழிகின்றதா? உள்பொருள் ஒன்றா? பலவா?" என்று இவ்வகையில் ஆராயும் இந்நூல்களை உண்மையறிநூல் (Philosophy) எனலாம் ஆனால் உலகியலை நடத்திப் போவதற்குத் தோற்றத்தைத் தாண்டி அப்பால் ஓடவேண்டுவதில்லை. ஆகவே, உலகியலை ஒழுங்காக நடத்துவதற்கு வேண்டிய அறிவினைப் புகட்டும் நூல்கள் மற்றொருபுறம் நிலவிவருகின்றன. இவற்றை உலகியலறிநூல் (Science) எனலாம். சுருக்கமாக இவற்றை இயற்கைநூல் எனல் தகும். உண்மைநூலை ஆராய்பவர்கள் உள்பொருள் அனைத்தையும் ஆராய வேண்டி நிற்கின்றனர். ஆனால் உலகியலின் துறைகளோ பலப்பல; கல்வி கரையில கற்பவர் நாள்சில; ஆதலினால் மக்கள், பலவாகிய அவ்வவற்றில் தனித்தனியே பிரிந்து புகுந்து ஆராய முற்படுகின்றனர். உலகத்திலுள்ள பொருள்கள் உயிர்ப்பொருளும் உயிரல்பொருளுமாக விளங்குகின்றன. உயிரல் பொருள்களை, வானநூல் (Astronomy) தரைநூல் (Geology) இயற்கைத்தோற்ற நூல் (Physics) இயற்கையமைப்பு நூல் (Chemistry), என்று பலவகையாக ஆராய்கின்றனர். உயிர்ப்பொருள்களைப்பற்றி ஆராய்வாரும், நிலைத்திணை உயிர்நூல், (Botany) இயங்குதிணை உயிர்நூல் (Zoology) என்று பிரித்தும், உடல்நூல் (Physiology) உள்ளம் நூல் (Psychology) என வகுத்தும் ஆராய்கின்றனர்.

உள்ளநூல் உள்ளத்தைப் பற்றியது. அறிவாராய்ச்சி நூலும் (தருக்கம் Logic), அழகுநூலும் (Aesthetics), அறநூலும் (Ethics), உள்ளத்தைப்பற்றியனவே யாம். ஆனால் அவையோ, "அறிவு எவ்வாறிருத்தல் வேண்டும், அழகு எங்ஙனம் அமைதல் வேண்டும், மக்களது ஒழுக்கம் எந்த வகையில் ஒளிர்தல் வேண்டும்" என ஆராய்கின்றன. உள்ளத்தியற்கை நூலோ, வேண்டற்பாலதைப் பற்றிக் கூறாது உள்ளதை உள்ளவாறே ஆராய்கின்றது. "மக்களுடைய அறிவு எத்தகையது; எவ்வாறு வளர்கிறது; அவர்கள் அழகு என எதனைப் புகழ்கின்றனர்; அவர்களது உள்ளநிலை என்ன! மக்களது ஒழுக்கம் எத்தகையது, எவ்வாறு தோன்றுகின்றது, மாறுதல் அடைகின்றது?" என்றெல்லாம் ஆராய்வதே உள்ளத்தியற்கைநூலின் வேலையாம். இஃது உயர்நிலை நூலாகாது (Normative science), உள்ளத்தை ஆராயும் இருப்புநிலை நூலாகிறது (Positive science)

யாதானும் ஒருபயனைக்கருதிப் பலர் பயிலும் பயனிலைநூலாம் கருவிநூலும் (Technology), இது அன்று. இயற்கைநூல் என்பவை எல்லாம் தன்னலம் இல்லாத இடத்தே எழுந்தவையாகும். வானநூலை எப்பயன் கருதி ஆராயத் தொடங்கினர்? இயற்கைப் பொருள்களின் அமைப்பை யாது வேண்டி ஆராய்ந்தனர்? அவ்வாராய்ச்சியின் பயனாகப் பல நன்மைகளை உலகம் அடைந்ததென்பது உண்மையே. மின்னொளியைக்கண்டறிந்த பிறகுதான் அதனை விசிறியாகவும், விளக்காகவும், குதிரையாகவும் திருமுகமாகவும் பயன்படுத்திக்கொண்டோம். ஆயினும் இந்தப் பயனை மனதிலே எண்ணித்தான் மின்னொளியைக் கண்டுபிடித்தனர் எனச் சொல்லக்கூடுமோ? இயற்கைநூல் ஆராய்ச்சியினால், நாம் இயற்கைப்பிறப்பினை நன்கு அறியமுடிகின்றது; அதன் இயல்பினையும் செயலினையும் அறிந்தபோது இனி வரப்போவதனையும் உணர்ந்து அதற்குத்தக நடக்கின்றோம். நெருப்புச் சுடும் தன்மையது என்றறிந்தால், அதனில் கையை இட்டுப் புலம்பாது அடிசில் அட்டுண்டு அகமகிழ்கின்றோம். இவ்வாறு இயற்கையை நம் கையாளாக்கிக் கொள்கின்றோம். உள்ளத் தியற்கைநூலையும் கருவிநூலாகப் பயின்று பயன்பெறுகின்றனர். கல்விகற்பிப்பார் தமது கல்விமுறையைக் குழந்தைகளின் உள்ளநிலைக்கேற்ப ஒருசிறிது திருத்தி யமைக்கின்றனர். சொற்பொழிவாளர் "கேட்டார்ப்பிணிக்கவும் கேளார்வேட்கவும்" மொழிவது எவ்வாறென அறிகின்றனர். அம்மட்டோ? உலகியலை நடத்துவதற்கு உள்ளத்தியற்கை நூலறிவு வேண்டுவதேயாம். ஒரு சிறிய கருவியைக் கையாள்வதென்றாலும் அதில் கைவல் கம்மியனொருவனிடத்தே கையாளாய் இருந்து அக்கருவிநூலைப் பயின்ற பின்னன்றோ வேலையாள் என வெளிவருகின்றோம்? ஆனால், எல்லாக்கருவிகளிலும் மிக்க நுண்ணியதாகிய நமது உள்ளத்தைக் கையாள்வதற்கு ஏதேனும் பயில்கின்றோமோ? ஈதென்னே அறியாமை இருந்தபடி! ஒரு சிறு குழவியினிடத்தே அழகியதொரு கருவியைக் கொடுத்தால் அதனை உடைத்தெறிகின்றது. அங்ஙன மன்றோ மக்களிற் பலர் உள்ளமெனும் உயரிய கருவியினையும் உடைத்தெறிந்து உலகில் உழல்கின்றனர். கருவி நூலாகவேனும் இதனைக் கற்க வேண்டுவது இன்றியமையாததே யாம். ஆனால் உள்ளத்தியற்கைநூலின் உண்மைகளைக் கண்டுபிடித்தவர்கள் இப்பயனோக்கி ஆராய்ந்தவர்கள் அல்லர். முன்னர் ஆராய்ச்சி தொடங்குகின்றது, பின்னரே பயன் எதிர்பாராமல் தொடர்கின்றது. பயனை நோக்கியே ஆராய்ச்சிசெய்ய இயலாது. சிலஇடத்தே இயற்கைநூலின்முடிபு (Scientific Judgement) நமது கருத்துக்கு (Personal opinion) இசையாததாக இருக்கலாம். நம்முடைய உள்ளத்தின்செயல், உள்ளத்தினமைப்பினையும் உடலினமைப்பினையும் பொருத்ததாய் அவற்றிற்குக் கட்டுப்பட்டுக் கிடக்கின்றதுஎன உள்ளத்தியற்கைநூல் விளக்குகின்றது. எத்தொழிலையும் எவ்வாறேனும் செய்யலாகும் என எண்ணிக் கிடப்பார் இதுகண்டு அஞ்சி நடுங்குவர். உண்மைநாடாது பயனைநாடுவார் தமது கருத்துக் கிசையநூன்முடிபைத் திரித்தன்றோ கூறுவர். தமது கருத்தினைப் பொருட்படுத்தாது நூன்முடிபை ஆராய்வதே இயற்கைநூலறிஞரின் பெருமையாகும்; அன்னோர் தம் கருத்துக் கிசைந்தவையே உண்மை எனக் கனாக்காணார்; எதனையும் நம்பார்; ஒவ்வொன்றினையும் அளவையால் அளந்து அறிந்தபின்னரே தம் கொள்கையாகக் கொள்வர்.



ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினாற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்தநூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும்

விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பில் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0–12–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## பருந்தும் நிழலும்.

A. பாலகிருஷ்ணன் M. A. B. L. இயற்றியது.

டிக்வன்ஸி, எமர்ஸன், லாண்டார், ரஸ்கின் போன்ற பல ஆங்கில ஆசிரியர்களின் பிரபலமான கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கிய நூல். அவ்வக் கட்டுரைகளுக்குத் தோற்றுவாய் விளக்கம் முதலியனவும் அருமையாய் எழுதியிருக்கின்றார்.

விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

மானேஜர், கலா நிலயம்.

11. வேளாளர் தெரு, புரசை, சென்னை.

## நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

## குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

## பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0
,, சாதாரண கட்டடம் ,, 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் ... | ... ரூ. | 5 | 0 |
| அயோத்தியாகாண்டம் | ... | 5 | 0 |
| ஆரணியகாண்டம் ... | ... | 4 | 0 |
| கிட்கிந்தாகாண்டம் | ... | 4 | 8 |
| சுந்தரகாண்டம் ... | ... | 5 | 0 |

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## கணித சோதிடம்.

கணித ரீதியாய்ப் பலன் கூறுபவர். ஒருவருஷத்திற்கு மாதவாரியாகவோ அல்லது தசாபுக்தியாகவோ பலன் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஒன்பது பலனாக எழுத ரூ. 10. தினப்பலன் ரூ. 20. ஜாதகமில்லாதவர் பேரையும், கடிதம் எழுதும் நேரத்தையும் அறிவிக்கவும். ஒழு கேள்விக்கு ரூ. 1. பொருத்தம் பார்க்க ரூ. 1. ஜாதகம் குறிக்க ரூ. 2. மரணத்தைப்பற்றி வருஷ மாதந் தேதி நாழியுடன் அஷ்டவர்க்க பலன் எழுத ரூ. 25. புத்திர சந்தான மில்லாதவருக்குத் தோஷ நிவர்த்தி கூற ரூ. 5. அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

'அப்பாஜி சோதிடரை ஓராண்டாய் அறிவேன். அவரது சோதிடப்புலமையும் பலன்கூறும் திறத்தையும் கண்டுள்ளேன். பலன் சரியே நடந்து வருகின்றது' என, திரு T. V. கலியாணசுந்தர முதலியார் கூறுகின்றார்.

அப்பாஜி ஜோஸ்யர்,

321, ஐரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

## கௌசிக சிரோ கல்பம்.

தைலங்கள் இனித் தேவை யில்லை. வியாபாரிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், வக்கீல்களுக்கும், மாணக்கர்களுக்கும் மற்றும் மூளைவேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது. இக்கல்பம்பாலிலாவது ஜலத்திலாவது கொதிக்கவைத்து உபயோகிக்கலாம். மண்டையிடி, ஒற்றைத் தலைவலி, கண்எரிச்சல் மூளைக்கொதிப்பு முதலியவற்றை உடனே போக்கிக் கண்களுக்கு வன்மையையும் பிரகாசத்தையும் கொடுக்கும்.

பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.

இதனை விற்க எங்கும் ஏஜண்டுகள் தேவை:—

மானேஜர்:—சேலம் ஸ்டோர்ஸ்,

சேலம்.—SALEM.




## வர்த்தமானம்

அமீர் ஹபிபுல்லா என்ற பேரோடு ஆப்கானிஸ்தானத்தின் அரசைக் கைப்பற்றிய பாசா சாகோவைப் போர்வென்ற ஜெனரல் நாதர்கான் என்பவரை இம்மாதம் 15௳ அத்தேய ஜனங்கள் தங்கள் அரசராகத் தேர்ந்துகொண்டனர். இதனால் ஆப்கானிஸ்தானத்திற்கு ஒரு வருடத்திற்குள் நான்கு அரசர் மாறியபடியாகின்றது. முதலில் அமானுல்லா, ஜனங்களுக்குள் புரட்சியுண்டாவதை முன்னிட்டுத் தனது சிம்மாதனத்தைத் தன்சகோதரர் இனயடுல்லாவிற்குக் கொடுத்துப்போய் இப்பொழுது இதாலியாதேசத்தில் இருக்கின்றார். இவ்இனயடுல்லாவைப் பாச்சாசாக்கோ சிம்மாதனத்திலிருந்து அகற்றிவிட்டார். இப்பொழுது, பாச்சாசாக்கோவை வென்ற ஜெனரல் நாதர்கானை ஜனங்கள் அரசனாக்கி இருக்கின்றனர். இவர் முதலில் ஆப்கானிஸ்தானத்துச் சேனாதிபதியாயிருந்து பிறகு யுத்தமந்திரி ஆனவர். தேக அசவுக்கியத்தின்பொருட்டு மூன்று வருடங்களுக்கு முன்னால் இப்பதவியை அவர் 'ராஜிநாமா' செய்துவிட்டுப் பிரான்ஸ் தேசத்திலே வசித்துவந்தார். ஆனால் ஆப்கானிஸ்தானத்தில் போரும் குழப்பமும் ஏற்பட்டதன்நிமித்தம் சென்ற மார்ச்சுமாதம் தன் சுயதேசத்திற்குத் திரும்பிவந்து, சைநியங்களோடு பச்சாசாக்கோவை மூன்றுமுறை யெதிர்த்துப் பின்னிடைந்தாரேனும், நான்காந்தரம் எதிர்த்ததில் பாச்சாசாக்கோவை வென்றுவிட்டதாகத் தெரியவருகின்றது. இவர் அமனுல்லாவின் உறவினர். அரசைத் தான் ஏற்பதற்கு இவர் அவா உடையவரல்லாதிருந்தும், அமனுல்லாவை மறுபடி அரசனாக்குவது இயலாததென்று அத்தேயத்தவர் நினைப்பதால், நாட்டைக் காப்பதற்கு ஓர் அரசன் வேண்டும் என்ற கடமையை முன்னிட்டே ஜெனரல் நாதர்கான் முடிதாங்கச் சம்மதித்ததாகத் தெரிகின்றது.

'ஆர்க்' கோட்டையிலிருந்து கடைசியாகப் பாச்சாசாக்கோ சுவரில் துவாரம் செய்து தப்பித்துக் கொண்டாரென்றும், அப்படித் தப்பித்துப்போகும் அவசரத்தில் தன் குடும்பத்தினரையும் காப்பாற்றி அழைத்துச் செல்லச் சமயம் வாய்க்கவில்லை யென்றும், அதனால் அவர் தந்தையும் சகோதரரும் சிறை பற்றப்பட்டனரென்றும், தப்பித்துச் சென்றவர், கொஹிஸ்மான் ஜனங்களிடம் சென்று அவர்களைத் தன்னோடுசேர்ந்து நாதர்கான்மீது போர்தொடுக்கத் தூண்டிக் கொண்டிருக்கின்றாரென்றும் சொல்லிக்கொள்கின்றனர்.

***

சோக்கலிங்க வித்யாசாலை, கோ. லேட்சுமிபுரம். கானாடு காத்தான்:—இப் புரட்டாசிமாதம் 26௳ இவ்வித்தியாசாலை மாணவ மாணவிகள் கலைமகள் திருவுருவப்படத்திற்குப் பூஜைசெய்து கதர்க்கொடி தாங்கித் தேசீய கீத கோஷத்துடன் ஊர்வலம் வந்து கலைமகள் விழாவை இனிது நிறைவேற்றின ரென்றும், 27௳ மீனாக்ஷி சுந்தரேச்வரன் ஆலயத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் இவ் வித்தியாசாலை மாணவர்களால் நடிப்புப் பாட்டுக்களும், பாரதியார் கீதங்களும், உண்மைபேசி உயர்வடைந்த விரகுவெட்டியின் சரிதமும் நாடக ரூபமாய் நடிக்கப்பெற்றபின் மாணவிகள் தலையில் செம்புதாங்கி அடித்த கும்மி, கோலாட்டம் முதலியவைகளின் திறமை நன்கு பாராட்டப் பட்டனவென்றும், தலைமை ஆசிரியர் எழுதுகின்றார்.

## மதிப்புரை

### இராஜ தரங்கிணி.

இது, காஷ்மீரமன்னர்களின் சரித்திரச் சுருக்கம். முதல் பாகம். கல்ஹணகவி இயற்றிய வடமொழி நூலினின்றும், கவர்ன்மெண்ட் ஓரியண்டல் லைப்ரரியின் ஸீனியர் பண்டிதராக விருக்கும், பண்டித சிரோமணி, வி. கிருஷ்ணமாசாரியாரவர்களால் தமிழில் எழுதப்பட்டுச் சென்னை, நுங்கம்பாக்கம் எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பனியாரவர்களால் பிரசுரஞ் செய்யப்பட்டது. விலை அணா 10.

தெளிய தமிழ்நடையில் இலக்கணப்பிழைகளில்லாமல் வரையப்பெற்றிருப்பதால் இப்புத்தகத்தைப் பாராட்டுகின்றோம். மேலும், இயற்கையழகுவாய்ந்த காஷ்மீரத் தாசபரம்பரையைச் சுருக்கமாக இயம்புவதே கருமமாயமைந்த இந்நூலால், பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்கென்று புராணக்கதைகளை மனம்போனபடி சிதைத்து எழுதித்தரும் புத்தகங்களிலிருந்தும், கொலையுங் களவும் விபசாரமுமாய் வரிக்குப்பலஇலக்கணப் பிழைகளோடும் வெளிவரும் நாவல்களிலிருந்தும், விளையக்கூடிய தீங்குகள் ஒன்றும் நேர்வதற்கில்லை.

சரித்திர ஆராய்ச்சியில் ஊன்றிய சிந்தையுடையோர்க்கு இந்நூல் உதவியாயிருக்கும் என்பதுடன், இலக்கியச்சுவைகளையும் இதனில் ஒவ்வோரிடத்திற் காணலாம். உதாரணமாக, நற்குண நற்செய்கைகளால் சிறந்துவிளங்கிய துஞ்சீனன் என்றவோ ராசனுக்கு மக்கட்பே றில்லாமையைக் குறிக்குங்கால்,

> "துஞ்சீனனுக்கு மக்கட்பே றில்லை. அவனுக்குப் பின் அவனைப்போல் வேறெவனும் மன்னனாக முடியாதென் றெண்ணியே பிரமதேவன் அவனுக்கு மக்கட்பேற்றை அளிக்கவில்லைபோலும்! கரும்பைவிட மேலாகவோ அதற்கு நிகராகவோ அதன் கனி சுவைபெற்றிருப்பது இயலாதென்றெண்ணியே பிரமதேவன் கரும்புக்குக் கனியை ஏற்படுத்தவில்லை"

என்று எடுத்துக்காட்டுவதும்; அரசர் மரபிற்றோன்றியும் காலவித்தியாசத்தால் தன் இளமையைக் குயவரிடையில் கழிக்கவேண்டி நேர்ந்த பிரவரஸேநன், அக்கம் பக்கத்துக் குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டிருப்பானாலும்,

> "தண்ணீரில் உற்பத்தியாகித் தண்ணீரிலேயே மிதக்கும் தாமரை தண்ணீரில் ஒட்டாமல் தண்ணீரின்மேல் நின்று கதிரவனையே நோக்கி யிருப்பது போல், அவன் அக்குழந்தைகளைவிட மேலானவனாகவே தோன்றினான்; விளையாட்டிலும் அரசர்க்கேற்றவாறு பெருந்தன்மையையே மேற்கொண்டான்"

என நுனித்துரைப்பதும், தமிழிற்குப் புதிய கருத்துக்களேயாகும். இவ்வகை அழகுவாய்ந்த இடங்கள் இந்நூலின்கண் இன்னுஞ்சில இருக்கின்றன. ஆதலால் தமிழ்நயம் உணர்ந்தவர், வடமொழி வழங்கும் நயங்கள்சில தாம் சேகரித்துக்கொள்ள இப்புத்தகம் உதவுமென்றே எண்ணுகின்றோம்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

*MANAGER:—*

***"KALANILAYAM"***

*11, VELLALA STREET.*

**Purasawalkam MADRAS.**

**1928**-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்
*சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும்.* T. P. *மீனாட்சிசுந்தரம்* M. A .B. L.—51 *கட்டுரைகள்.*

2. கம்ப இராமாயணம்
*பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை*—T. N. *சேஷாசலம்*, B. A. B. L. 51 *கட்டுரைகள்,*

3. அகப்பொருள் வரலாறு
*காட்சிமுதல், ஓதற்பிரவு வரை*—K. *இராமரத்நம் ஐயர்* B. A. 18 *கட்டுரைகள்.*

4. காந்திமதி
*காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல்.* T. N. *சேஷாசலம்* B. A. B. L. 51 *இதழ்களில் வந்துளது.*

5. தமிழ்ப்பாடம்
*நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.*

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்
*பிரிடரிக் நீட்ஷேன் எபிகூரான் ஜீனோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்*—T. R. *இராஜகோபால்,*

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி
E. T. *சொக்கம்மாள்* B. A; L. T. *எழுதியது* 6 *கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்
*தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்*—E. N. *தணிகாசல முதலியார்* B. A. B. L. 8 *கட்டுரைகள்*

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)
*கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.*

10. இலக்கியக் கதைகள்
*புரந்தனூர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.*—R. *முத்தையர்*

11. வானசாஸ்திரம்
*இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.*—20 *கட்டுரைகள்.*

மலர்வனம் பழமுதிர்சோலை
*சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்*—14 *கட்டுரைகள்.*

*காலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.*

| | | | |
|---|---|---|---|
| விலை விபரம்—தபால் செலவு உள்பட:— | பையின்டு செய்யாதது | உள்நாடு ரூ 8—0—0 | வெளிநாடு ரூ 9—8—0 |
| | ஆப்லெதர் கில்டுபயிண்டு | உள்நாடு ரூ 10—0—0 | வெளிநாடு ரூ 11—8—0 |
| | காலிகோ பயிண்டு | உள்நாடு ரூ 9—8—0 | வெளிநாடு ரூ 11—0—0 |

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L (Editor)